


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 220 23.03.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 220 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(23-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-9
பிறை: வளர்பிறை
திதி
பஞ்சமி இரவு 9.54 வரை
பிறகு சஷ்டி.
நட்சத்திரம்:
கார்த்திகை இரவு
11.49 வரை பிறகு ரோகிணி
யோகம்
மரண/அமிர்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 - 12.00 மணி.
சூலம் - கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி

மேஷம் ......................வரவு
ரிஷபம்..................தாமதம்
மிதுனம் .................ஆதரவு
கடகம்....................முயற்சி
சிம்மம்....................வெற்றி
கன்னி ............... மேன்மை
துலாம் ................. நன்மை
விருச்சிகம்..............அன்பு
தனுசு.....................தெளிவு
மகரம் .................சிந்தனை
கும்பம்................ கருணை
மீனம்....................நேர்மை

# அரசியல்வாதிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்த வேண்டும்

## கண்காணிப்பை தீவிரப்படுத்த தேர்தல் ஆணையம் திட்டம்

**சென்னை, மார்ச் 23:**


தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பண பலத்தை பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்படும் வகையில் கண்காணிப்பை தீவிரப் படுத்த வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தல்களில் அதிக செலவு செய்யும் மாநிலமாக தமிழகத்தை தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது. கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலின் போது, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் அதிக செலவு செய்யப்படுவதை உறுதி செய்து, தேர்தலையே தேர்தல் ஆணையம் நிறுத்தியது. அப்போது அரசியல் வாதிகளிடம் இருந்து கோடி கோடியாக ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2017-ல் நடைபெற்ற சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலிலும், பணப் பட்டுவாடா நடைபெறுவதை உறுதி செய்து, அந்த தேர்தலையும் தேர்தல் ஆணையம் நிறுத்தியது. இதற்கிடையில் தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 108 தொகுதிகள் அதிக செலவு செய்யக் கூடிய தொகுதிகளாக தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

வழக்கமாக இரு தொகுதிகளுக்கு ஒரு செலவினப்பார்வையாளரை நியமிக்கும் தேர்தல் ஆணையம், இந்த முறை 151 செலவினப்பார்வையாளர்களை நியமித்துள்ளது. இந்த முறை தமிழகத்தில் பண பலமின்றி தேர்தலை நேர்மையாக நடத்த வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது. அதற்காகவே மாநில அளவில் தேர்தல் சிறப்புப் பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் களம் சூடு பிடிக்காத நிலையில், சென்னை, திருவள்ளூர், காஞ்சி, செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள், எஸ்பிக்கள் - சென்னை, ஆவடி, தாம்பரம் மாநகர காவல் ஆணையர்கள் உள்ளிட்டோருடன் சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங், தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மாநில காவல் துறை ஒருங்கிணைப்பு அதிகாரி பிரவீன் குமார் அபினபு ஆகியோர் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனை நடத்தினார்.







இந்த ஆலோசனைக் கூட்டத்தில், 4 மாவட்ட பறக்கும் படைகள், நிலை கண்காணிப்புக் குழுக்களின் கண்காணிப்புப் பணிகள், அவற்றின் முன்னேற்றம், கண்காணிப்பில் புகுத்தப்பட்ட புதுமைகள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட வாரியாக கேட்டறிந்தார்.

தொடர்ந்து,"விதிகளை மீறி பணபலத்தைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்படும் வகையில், கண்காணிப்புப் பணிகள் இருக்க வேண்டும். அதற்கேற்ப கண்காணிப்பை வரும் நாட்களில் தீவிரப்படுத்த வேண்டும்" என்று அவர் கூட்டத்தில் அறிவுறுத்தியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லையா? மார்ச் 26 வரை விண்ணப்பிக்கலாம்!

சிறப்பு தீவிர திருத்தத்திற்கு பிறகு வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம் எனவும் மார்ச் 26 ஆம் தேதி வரை அவகாசம் உள்ளதாகவும் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இறுதி வாக்காளர் பட்டியல் பிப். 23 அன்று வெளியான நிலையிலும், அதில் பெயர் இடம்பெறவில்லை என்றால் தகுதியுள்ள ஒருவர், படிவம் 6 மூலமாக உரிய ஆவணங்களுடன் தங்கள் பெயரைச் சேர்க்கலாம். படிவம் 7 மூலமாக நீக்கம் செய்யலாம், படிவம் 8 மூலமாக வாக்குச்சாவடி மாற்றத்திற்கு, தொகுதி மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

திருத்தங்களை மேற்கொள்ள விரும்புவோர் இணையதளம், செயலி மூலமாகவும் ஆட்சியர் அலுவலகங்களில் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலில் வாக்களிக்க 13 வாக்காளர் அடையாள சான்று

ஆட்சியர் சினேகா வெளியிட்ட அறிக்கை: 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ், வாக்குப் பதிவின் போது ஆள் மாறாட்டத்தைத் தவிர்க்கவும், உண்மையான வாக்காளர்களை உறுதிப்படுத்தவும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் ஏறத்தாழ 100% பேருக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், வாக்காளர்கள் அனைவரும் வாக்குச்சாவடிக்கு வரும் போது இந்த அட்டையை முதன்மை ஆவணமாகக் கொண்டு வர வேண்டும் என ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டும், அதனைத் அளிக்க இயலாத வாக்காளர்கள், தங்களின் அடையாளத்தை மெய்ப்பிக்க தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ள 12 மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

அதன்படி, ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சகத்தின் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு அட்டை (ஆயுஷ்மான் பாரத்), ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப் பட்ட திறனட்டை, இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய மற்றும் மாநில அரசுகள் அல்லது பொதுத் துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட பணி அடையாள அட்டைகள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் சமூக நீதி அமைச்சகத்தால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்காளர்கள் பயன்படுத்தலாம்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள அச்சுப் பிழைகளை பொருட்படுத்தத் தேவையில்லை என்றும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால் வேறொரு தொகுதியின் தேர்தல் அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையையும் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புகைப்படம் பொருந்தாத காரணத்தால் அடையாளத்தை உறுதி செய்ய முடியாத பட்சத்தில் மட்டுமே மாற்று ஆவணம் கோரப்படும். வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அசல் கடவுச் சீட்டு மட்டுமே சான்றாகும்.

## இந்திய ராணுவத்திற்கான செயற்கைக்கோள் சேவைகளை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுடெல்லி, மார்ச் 23:**

இந்திய ராணுவத்திற்கான செயற்கைக்கோள் அடிப்படையிலான சேவைகளை மேம்படுத்துவதற்காகவும், பாதுகாப்புத் தகவல் தொடர்பு அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்தியா மற்றொரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது.


அதன்படி, டெல்லியிலுள்ள தலைமையக ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படை மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவ னத்தின் (இஸ்ரோ) கீழ் ஆமதாபாத்தில் செயல்படும் விண்வெளிப் பயன்பாட்டு மையம் (எஸ்.ஏ.சி.) ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (எம்.ஓ.யு.) தயாரித்தது.

தகவல் தொடர்பு நம்பகத்தன்மை மேம்படும். தற்சார்பை ஊக்குவிக்கிறது. உள்நாட்டு இஸ்ரோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது. வெளிநாட்டு அமைப்புகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது என்று இஸ்ரோ விஞ்ஞா னிகள் கூறினர்.

# 48 மணி நேரத்தில் ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும்; ஈரானுக்கு டிரம்ப் கெடு

**வாஷிங்டன், மார்ச் 23:**





வளைகுடா பிராந்தியத்தில் கடந்த 28-ந்தேதி முதல் நடந்து வரும் பயங்கர போர், 4-வது வாரத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது. ஈரான் மீது திடீரென போர் தொடுத்து, அந்த நாட்டின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியை படுகொலை செய்த அமெரிக்காவும், இஸ்ரேலும் தொடர்ந்து அந்த நாட்டை தாக்கி வருகின்றன. இதனால் தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட பகுதிகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

இந்த பயங்கர போரில் தங்கள் உச்சபட்ச தலைவரை முதல் நாளிலேயே இழந்ததுடன், அடுத்தடுத்த நாட்களில் மேலும் பல தலைவர்களையும் பறிகொடுத்த ஈரான், ஆனாலும் சளைக்காமல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. குறிப்பாக இஸ்ரேலின் பாதுகாப்பு அரணாக விளங்கும் 'அயர்ன் டோம்'-ஐ தாண்டி, ஈரானின் ஏவுகணைகள் மற்றும் கொத்துக்குண்டுகள் அந்த நாட்டை பதம் பார்த்து வருகின்றன. இதில் ஜெருசலேம், டெல் அவிவ் நகரங்கள் பெரும் சேதத்தை சந்தித்து வருகின்றன.

மறுபுறம், அமெரிக்காவின் படைத்தளங்கள் அமைந்திருக்கும் வளைகுடா நாடுகளையும் விடாமல் ஈரான் தாக்கி வருகிறது. இதில் அந்த நாடுகளின் எரிசக்தி மற்றும் எண்ணெய் நிறுவனங்கள் மட்டுமின்றி, விமான நிலையம் போன்ற உள்கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன. 3 வாரங்களுக்கு மேலாக நடந்து வரும் இந்த போரில், ஈரான் முற்றிலும் சீரழிந்து விட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஈரானின் கடற்படை, விமானப்படை அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனாலும் ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், ஈரானுக்கு புதிய கெடு ஒன்றை டிரம்ப் விதித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது ட்ரூத் சமூக வலைத்தளத்தில் கூறியதாவது: "ஈரான் எந்தவித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாமல் ஹார்முஸ் நீரிணையை 48 மணி நேரத்திற்குள் முழுமையாக திறக்க வேண்டும்.

இல்லையெனில், ஈரானின் பல மின் நிலையங்களை அமெரிக்கா தாக்கி முற்றிலும் அழித்துவிடும். மிகப்பெரிய மின் நிலையத்திலிருந்து தாக்குதல் தொடங்கப்படும்." என்று பதிவிட்டுள்ளார்.

## வர்த்தக காஸ் சிலிண்டருக்கான ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்வு: மத்திய அரசு அனுமதி

**புதுடெல்லி, மார்ச் 23:**

ஈரான் போர் காரணமாக சமையல் காஸ் விநியோகம் தடைபட்டது. வீட்டு உபயோக சிலிண்டர்கள் விநியோகத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்காக வர்த்தக சிலிண்டர்கள் விநியோகத்துக்கு மத்திய அரசு கட்டுப்பாடு விதித்தது.

இதனால் நாடு முழுவதும் உள்ள உணவகங்களில் உணவுப் பொருட்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தற்போது மக்கள் காஸ் சிலிண்டர்கள் முன்பதிவு செய்வது குறைந்து, வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகம் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

வர்த்தக சிலிண்டர்கள் விநியோகத்தில் 5-ல் ஒரு பங்கு மீண்டும் தொடங்கிய பின்பு, மாநிலங்களுக்கு கூடுதலாக 10% ஒதுக்கீடு செய்யவும், பைப் மூலம் காஸ் விநியோகம் செய்யும் திட்டத்தை விரைவு படுத்தவும் மத்திய அரசு அனுமதி வழங்கியது.

இந்நிலையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கூடுதலாக 20% ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் வர்த்தக சிலிண்டர்களுக்கான ஒதுக்கீடு 50% ஆக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக உணவு விடுதிகள், தொழிற்சாலை கேன்டீன்கள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள், சமுதாய உணவு கூடங்கள் ஆகியவற்றுக்கு காஸ் சிலிண்டர்கள் தாராளமாகக் கிடைக்கும்.

# 4.1 கோடி சிறார்களுக்கு உடல் பருமன் பாதிப்பு: உலக அளவில் இந்தியாவுக்கு 3-வது இடம்

**புதுடெல்லி, மார்ச் 23:**

உலக அளவில் உடல் பருமனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா முதல் மூன்று இடங்களுக்குள் இருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. சுமார் 4.1 கோடி சிறுவர்களுக்கு இந்த பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து உலக உடல் பருமன் அட்லஸ் 2026 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது: இந்தியாவில் 5 முதல் 19 வயதுக்குட்பட்ட சுமார் 4.1 கோடி சிறுவர்கள் அதிக உடல் எடையுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 1.4 கோடி பேர் அதீத உடல் பருமன் பாதிப்புடன் இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனா மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவும் இப்பெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இதன் மூலம், இந்தியா ஒரே நேரத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் அதிகரித்து வரும் சிறார் உடல் பருமன் பாதிப்பு ஆகிய இரு முனை சவால்களை எதிர்கொண்டு வருகிறது.



கடந்த 1975-ல் 4% ஆக இருந்த சிறார் உடல் பருமன் பிரச்சினை, தற்போது உலக அளவில் 20 சதவீதத்தை நெருங்கியுள்ளது. வரலாற்றிலேயே முதல் முறையாக உலகளவில் உடல் எடை குறைந்த சிறுவர்களை விட, உடல் பருமன் கொண்டவர்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல நாடுகள் இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், பாதிப்பின் வேகத்திற்கு ஏற்ப தீர்வுகள் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# நெல்லையப்பர் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா
## கொடியேற்றத்துடன் தொடங்கியது



**நெல்லை, மார்ச் 23:**
தமிழகத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்றான நெல்லைடவுன் நெல்லையப்பர் கோவிலில் ஆண்டின் 12 மாதங்களிலும் விழாக்கள் நடைபெறுவது சிறப்பு ஆகும். அதில் ஒன்றாக பங்குனி மாதத்தில் பங்குனி உத்திர திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும்.

அதன்படி இந்த ஆண்டு பங்குனி உத்திர திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் விமரிசையாக தொடங்கியது. இதற்காக கோவில் நடை அதிகாலை திறக்கப்பட்டு பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

தொடர்ந்து கொடி பட்டத்திற்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டு கோவில் வளாகத்தில் பல்லக்கில் ஊர்வலமாக எடுத்து வந்தனர். பின்னர் கொடி மரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் வேத மந்திரங்கள் முழங்க, மேளதாளம் இசைக்க, பங்குனி உத்திர திருவிழா கொடியேற்றம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

தொடர்ந்து கொடி மரத்திற்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஞ்சள், பால், இளநீர் உள்ளிட்ட பல்வேறு வகையான அபிஷேக திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக வருகிற 25-ந்தேதி வேணுவனத்தில் வேணுவ நாதர் தோன்றிய வரலாற்று திருவிளையாடல் நிகழ்வும், வருகிற 31-ந்தேதி பங்குனி உத்திர செங்கோல் வழங்கும் விழாவும் நடைபெறுகிறது.

# தி.மு.க. கூட்டணியில்தான் தேர்தலை சந்திப்போம் - சண்முகம்



**சென்னை,மார்ச் 23:**
சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இன்று மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினர்.இதையடுத்து சிபிஎம் மாநில செயலாளர் சண்முகம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* 5 தொகுதிகளுக்கு சம்மதிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

*6 தொகுதிகள் வேண்டுமென எங்களது மாநில குழுவில் முடிவு எடுக்கப்பட்டது.

* முதலமைச்சரின் வேண்டுகோள் குறித்து மாநில அளவில் பேசி முடிவெடுப்போம்.

* 2026-ல் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இருந்துதான் சிபிஎம் தேர்தலை சந்திக்கும்.

*சென்னையில் கட்டாயம் சிபிஎம் போட்டியிடும்.

*தொகுதி எண்ணிக்கையில் தான் சிக்கல். கூட்டணியில் சிக்கல் இல்லை

* கூடுதல் சீட்டுக்காக கூட்டணி மாற மாட்டோம்.

*6 தொகுதிகள் வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தாய்- மகளை கடித்த வளர்ப்பு நாய்... குடும்பத்துடன் வேடிக்கை பார்த்த உரிமையாளர்



**வேதாரண்யம், மார்ச் 23:**
நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருகே தோப்புத்துறை பெருமாள் கோவில் பகுதியில் வசித்து வருபவர் ராமலிங்கம். இவரது மகளுக்கு திருமணமாகி கணவருடன் வசித்து வருகிறார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று அவர் தனது தாய், தந்தையை பார்ப்பதற்காக சொந்த ஊருக்கு வந்துள்ளார். அப்போது அதே தெருவில் உள்ள மற்றொரு வீட்டின் வளர்ப்பு நாய் நடந்து சென்றுள்ள அந்த பெண்ணை ஓடி வந்து கடித்துள்ளது. இதனால் வலி தாங்காமல் அவர் அலறி துடித்துள்ளார். அலறல் சத்தம் கேட்ட தாய், மகளை காப்பாற்றுவதற்காக ஓடி வந்துள்ளார்.

அப்போது அவரையும் விட்டு வைக்காமல் அந்த நாய் கடித்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் வளர்ப்பு நாயின் உரிமையாளர் வீட்டை விட்டு வெளியே வந்து தாய்- மகளை நாய் கடிப்பதை தடுக்காமல் வீட்டின் கேட்டை பூட்டி விட்டு, மனிதாபிமானம் இல்லாமல் குடும்பத்துடன் அதனை வேடிக்கை பார்த்தபடி இருந்துள்ளார்.

பின்னர், ஒருவழியாக அக்கம் பக்கத்தினர் உதவியுடன் இருவரையும் மீட்டு வேதாரண்யம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து வேதாரண்யம் போலீசில் புகார் அளிக்கப்பட்டு உள்ளது. அதன் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தாய், மகளை நாய் கடித்த சம்பவம் அங்குள்ள ஒரு வீட்டில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி. டி.வி. கேமராவில் பதிவானது. தற்போது அந்த பதைபதைக்கும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# வரும் சட்டமன்ற தேர்தலில் நானும், என் மனைவியும் போட்டியிட மாட்டோம்- சரத்குமார்



**சென்னை, மார்ச் 23:**
கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது, நடிகர் சரத்குமார் பா.ஜனவில் இணைந்தார். அந்த நேரத்தில் தான் நடத்தி வந்த அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியையும் கலைத்தார். தொடர்ந்து பா.ஜ.க.வுக்காக தேர்தல் பணி ஆற்றினார். விருதுநகர் பாராளுமன்ற தொகுதியில் ராதிகா சரத்குமார் களம் கண்டார். அந்த தேர்தலில் அவர் தோல்வியை தழுவினார்.

இதற்கிடையே, பா.ஜ.க.வில் இணைந்து 2 ஆண்டுகள் ஆகியும் சரத்குமாருக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் எந்தவொரு பதவியும் பா.ஜ.க.வில் வழங்கப்படவில்லை.

இந்தநிலையில், சட்டசபை தேர்தலும் நெருங்கி விட்டதால் சரத்குமார் தனது ஆதரவாளர்கள் சிலருக்கு போட்டியிட பா.ஜ.க. தலைமையிடம் வாய்ப்பு கேட்டிருந்தார். ஆனால் அதற்கு பா.ஜ.க. தலைமையிடம் இருந்து எந்தவொரு பதிலும் வரவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் பா.ஜ.க. சரத்குமாரை புறக்கணிப்பதாக அவரது ஆதரவாளர்கள் சமூக வலைத்தளத்தில் கருத்து பதிவிட்டனர். பா.ஜ.க.வில் இருந்து விலகுங்கள் என்றும் குரல் எழுப்பி வருகின்றனர்.

ஏற்கனவே பா.ஜ.க. தலைமை மீது அதிருப்தியில் இருக்கும் சரத்குமார் தனது ஆதரவாளர்களின் கருத்துக்களை கேட்கவும், அடுத்தக்கட்ட நகர்வு குறித்து விவாதிக்கவும் சென்னையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அவசர ஆலோசனை கூட்டத்தை கூட்டினார்.

சென்னை தியாகராயநகர் கீதம் ஹாலில் காலை 10 மணிக்கு நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு அரசியலில் தனது அடுத்தக்கட்ட நகர்வு குறித்து சரத்குமார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

பாஜகவில் இணையும்போது கொடுத்த உத்தரவாதங்கள் என்னவென்று அவர்களுக்கு தெரியும். இப்போது வரை பொறுப்பு வழங்கப்படவில்லை.

உத்தரவாதம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது செயல்பாட்டுக்கு வரவில்லை.

வரும் சட்டமன்ற தேர்தலில் நானும், என் மனைவியும் போட்டியிட மாட்டோம்.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு மதிப்பீடு என்பதே கிடையாது, தவெக தலைவர் விஜய் தலைவரோ கிடையாது.

பொறுப்பு இருந்தால் தான் என்னாலும் செயல்பட முடியும், இதை வேதனையாக சொல்லவில்லை.. ஆதங்கமாக சொல்கிறேன்.

ஏன் நீங்கள் சமத்துவ மக்கள் கட்சியை தொடங்கக்கூடாது என்று கூட எனத ஆதரவாளர்கள் கூறினார்கள்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# “சசிகலாவுடன் ராமதாஸ் கூட்டணி வைத்ததில் விருப்பமில்லை”
## பாமக எம்எல்ஏ அருள் அதிருப்தி



**சேலம், மார்ச் 23:**
பாமக நிறுவனர் ராமதாஸ், சசிகலாவுடன் கூட்டணி அமைத்ததற்கு சேலம் மேற்கு தொகுதி பாமக எம்எல்ஏ-வான அருள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக, அதிமுக, தவெக, நாதக கட்சிகள் தலைமையில் நான்குமுனை போட்டி நிலவி வருகிறது. இதில், அதிமுக கூட்டணியில் பாமக தலைவர் அன்புமணி இடம் பெற்றுள்ளார். ராமதாஸ் தரப்பினர் அதிமுக, திமுக, தவெக உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் பின்னடைவை சந்தித்தனர்.

இந்நிலையில், சசிகலா பொதுச் செயலாளராக இருக்கும் புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் கட்சியுடன் ராமதாஸ் கூட்டணி அமைத்துள்ளார். இவர்கள் 234 தொகுதிகளிலும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர். இதற்கு ராமதாஸ் ஆதரவு பாமக நிர்வாகிகள் பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சேலம் மேற்கு தொகுதி பாமக எம்எல்ஏ-வான அருள், அன்புமணியை கடுமையாக எதிர்த்து வந்தார். ராமதாஸின் நம்பிக்கைக்கு உரியவராகவும், தீவிர ஆதரவாளராகவும் உள்ள அருள், சசிகலாவுடன் ராமதாஸ் கூட்டணி வைத்ததற்கு அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அருள் கூறும்போது, “சட்டப்பேரவை தேர்தலில் சசிகலாவுடன் ராமதாஸ் கூட்டணி வைத்திருப்பதில் எனக்கோ, ஜி.கே.மணிக்கோ விருப்பமில்லை. கட்சியில் உள்ள பெரும்பாலான நிர்வாகிகளும் எங்களது கருத்தையே சார்ந்துள்ளனர். சசிகலாவுடன் வைத்துள்ள கூட்டணி குறித்து கட்சி மேலிடத்தில் அதிருப்தி தெரிவித்துள்ளேன். இருந்தாலும், பாமக நிறுவனர் ராமதாஸை விட்டு மாற்றுக் கட்சிக்கு செல்லும் எண்ணம் எனக்கில்லை. கடைசி வரை பாமக நிறுவனர் ராமதாஸுடன் இருப்பேன்” என்றார்.

# “ஆம்பூரில் பிரேமலதா போட்டியிடுவது திமுகவின் கையில்” – எல்.கே.சுதீஷ் கருத்து



**ஆம்பூர், மார்ச் 23:**
“ஆம்பூர் தொகுதியில் எங்கள் பொதுச்செயலாளர் போட்டியிடுவது எங்கள் கையில் இல்லை; திமுக-விடம் தான் உள்ளது” என்று தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் தெரிவித்தார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் நேற்று ரம்ஜான் சிறப்புத் தொழுகை நடைபெற்றது. முடிவில், தொழுகை முடித்து வெளியே வந்த மக்களிடம் ஆம்பூர் தொகுதி திமுக எம்எல்ஏ-வான வில்வநாதனும் தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷும் ரம்ஜான் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் எல்.கே.சுதீஷ் கூறும்போது, “திமுக கூட்டணியில் எங்களுக்கான தொகுதிகள் எண்ணிக்கை இன்னும் முடிவாகவில்லை. பிறகு முடிவு செய்யப்படும். நாங்கள் திமுக கூட்டணியில் இணையும் முன்பு, 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று திமுக-வினர் சொன்னார்கள். தேமுதிக சேர்ந்த பிறகு 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றிபெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதிமுக இந்தமுறை கண்டிப்பாக வாஷ்அவுட் ஆகும். தவெக குறித்து தேர்தல் முடிந்த பிறகுதான் தெரியும். கடந்த 2006-ல் நாங்கள் கட்சி ஆரம்பித்தபோது எங்களுக்கு இல்லாத பலம் வேறு யாருக்கும் இல்லை. ஆனால், அது வாக்காக மாறுமா என்பதைப் பார்க்க வேண்டும். நான் குடியாத்தத்தில் போட்டியிட்டபோது கிட்டத்தட்ட 30 ஆயிரம் வாக்குகள் பெற்றேன். கூட்டணி என்று வரும்போதுதான் பெரிய வெற்றி கிடைக்கும்” என்றார்.

ஆம்பூர் தொகுதியில் எங்கள் பொதுச்செயலாளர் போட்டியிடுவது எங்கள் கையில் இல்லை; திமுக-விடம் தான் உள்ளது. கடந்த 2006-ல் நான் குடியாத்தம் தொகுதியில் பெற்றதை விட கள்ளக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்டு அதிக வாக்குகளை பெற்றேன். ஆனால், வெற்றி பெற முடியவில்லை. நடிகர்கள் கட்சி ஆரம்பித்த பிறகு வெற்றி பெறுவது கடினம் தான்” என்றார்.

# தமிழகத்தில் மார்ச் 26 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு: வானிலை முன்னறிவிப்பு!



**சென்னை, மார்ச் 23:**
தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் மார்ச் 26-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் கீழ்கோத்தகிரி எஸ்டேட்டில் 6 செமீ, தேனி மாவட்டம் சோத்துப்பாறையில் 4 செமீ, தென்காசி மாவட்டம் குண்டாறு அணை, தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பொதுச் சின்னத்தில் போட்டி: ‘மாம்பழம்’ இல்லாததால் ‘தலைக்கவசம்’ கேட்கும் ராமதாஸ்



**சென்னை, மார்ச் 23:**
எந்தப் பக்கமும் எதிர்பார்த்த ‘அழைப்பு’ இல்லாததால் கடைசி முயற்சியாக சசிகலாவின் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்துடன் கைகோத்திருக்கிறார் பாமக நிறுவனர் ராமதாஸ்.

“நாங்கள் தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிடுவோம்” என சசிகலா ஏற்கெனவே அறிவித்துள்ளார். ஆனால், ராமதாஸால் உருவாக்கப்பட்ட ‘மாம்பழம்’ சின்னம் தற்போது அவர் வசம் இல்லை. அதைப் பெறுவதற்கான சட்டப் போராட்டம் இப்போதைக்கு முடிவுக்கு வருமா என்று தெரியாத நிலையில், இந்தத் தேர்தலுக்கு புதிதாக இன்னொரு சின்னத்தைத் தேர்வு செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி இருக்கிறார் ராமதாஸ்.

அதன்படி, தங்கள் கட்சிக்கு பொதுவான ஒரு சின்னத்தை ஒதுக்கக் கோரி தேர்தல் ஆணையத்தை அவர் அணுகவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி பொதுச் சின்னம் ஒதுக்கப்பட்டால் தங்களுக்கான சின்னமாக தலைக்கவசத்தை (ஹெல்மெட்) ராமதாஸ் தரப்பில் தேர்வு செய்து வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

# புதுச்சேரியில் போட்டியிடும் 2 அதிமுக வேட்பாளர்களை அறிவித்தார் பழனிசாமி !



**சென்னை, மார்ச் 23:**
சென்னை: புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மன்றக் குழு பரிசீலித்து எடுத்த முடிவின்படி, 9.4.2026 அன்று நடைபெற உள்ள புதுச்சேரிமாநிலசட்டப்பேரவை பொதுத் தேர்தலில், அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளர்களாகக் கீழ்க்கண்டவர்கள் கீழ்க்காணும் சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நிறுத்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உப்பளம் தொகுதியில் புதுச்சேரி மாநிலக் கழகச் செயலாளர் ஏ. அன்பழகன் மற்றும்உருளையன்பேட்டையில் புதுச்சேரி மாநிலக் கழக முன்னாள் துணைச் செயலாளர் ஏ.காந்தி ஆகியோர் போட்டியிடுவார்கள்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருத்தணி முருகனை வழிபட்டு சீமான் இன்று பிரச்சாரம் தொடக்கம்



**சென்னை, மார்ச் 23:**
நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தனது தேர்தல் பிரச்சாரத்தை திருத்தணி முருகன் கோயிலில் வழிபாடு செய்து இன்று (மார்ச் 23) தொடங்குகிறார்.

தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதையடுத்து வேட்பாளர் தேர்வு, பிரச்சாரம் உள்ளிட்ட களப் பணிகளை அரசியல் கட்சிகளும் தீவிரப்படுத்தி உள்ளன. இதில் நாம் தமிழர் கட்சி வழக்கம்போல் தனித்து களம் இறங்குவதுடன், தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து விட்டது. இதன் தொடர்ச்சியாக அந்த கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அடுத்தகட்டமாக தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்தையும் தொடங்க இருக்கிறார்.

இதற்கான அறிவிப்பை நாம் தமிழர் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் செந்தில்குமார் நேற்று வெளியிட்டார். அதன்படி முதற்கட்ட தேர்தல் சுற்றுப்பயணமாக திருத்தணியில் சீமான் பிரச்சாரத்தை நாளை (மார்ச் 23) தொடங்குகிறார். காலை 10.30 மணிக்கு திருத்தணி முருகன் கோயிலில் வழிபாடு நடத்தி அங்கிருந்து வாகன பரப்புரையை சீமான் ஆரம்பிக்கிறார்.அன்றைய தினமே சோளிங்கர், ராணிப்பேட்டையிலும் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அதைத் தொடர்ந்து மார்ச் 24-ல் வேலூர், குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர், ஊத்தங்கரை ஆகிய தொகுதிகளிலும், 25ல் கிருஷ்ணகிரி, சூளகிரி, பாலக்கோடு, பாப்பி ரெட்டிப் பட்டி, பென்னா கரத்திலும், 26-ல் மேட்டூர், ஓமலூர், சேலம், வாழப்பாடி, ஆத்தூர், கள்ளக்குறிச்சியிலும், 27-ல் சங்கராபுரம், திருக்கோவிலூர், திருவண்ணாமலை, சேத்துப்பட்டு, வந்தவாசியிலும், 28-ல் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, திருவள்ளூர், ஆவடியிலும் பிரச்சாரம் செய்கிறார்.

# கரூரில் ஷூட்டிங் நடத்தியதாக பிரசாரம் செய்தார்கள்
## அதிமுகவை சாடிய ஆதவ் அர்ஜூனா



**சென்னை, மார்ச் 23:**
சென்னை ஆர்.கே.நகரில் நடைபெற்ற த.வெ.க. நிகழ்ச்சியில் அக்கட்சியின் தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:

*அ.தி.மு.க.வுடன் கூட்டணி செல்லவில்லை என்றவுடன் கரூரில் ஷூட்டிங் நடத்தியதாக பிரசாரம் செய்தார்கள்.

* எவ்வளவு கேவலமான கொடூரமான மனநிலை இருந்தால் இப்படி ஒரு பிரசாரத்தை உருவாக்குவார்கள்.

*கடந்த ஒரு வாரமாக அ.தி.மு.க.வினர் நம்மை விமர்சனம் செய்கிறார்கள்.

*அ.தி.மு.க. கூட்டணிக்கு செல்வோம் என அ.தி.மு.க., பா.ஜ.க., தி.மு.க. சேர்ந்து உருவாக்கினர்.

* விஜய் மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருந்ததால்தான் ஜனநாயகன் முடக்கப்பட்டுள்ளது.

* விஜயை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க பா.ஜ.க. தயாராக இருந்தது.

* விஜய் மதசார்பற்ற கொள்கையில் இருந்து வெளியே வந்தால் அவர் முதல்வர் வேட்பாளர்.

*இந்தி திணிப்புக்கு எதிரான பராசக்தி படத்தை வெளியிட பா.ஜ.க. எப்படி விட்டது?

இவ்வாறு அவர் பேசினார்.

செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

ADVERTISE WITH US

CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும் நம்பகமான மற்றும் விரைவான சேவை

- ✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
- ✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
- ✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
- ✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER

ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_

8939228901

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment

Why Invest Here?
- ✓ Fast Developing Area
- ✓ Near Upcoming Airport
- ✓ Excellent Appreciation Value
- ✓ Suitable for Residential & Investment
- ✓ Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847

LIMITED PLOTS – BOOK NOW!

WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®

MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sir Manjal Mart
YOUR DESIRE WE DELIVER

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

THE BEST CENTRE OF CAR WASH

SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact
8248951872



## கவிதை அரங்கம்!



ஒரு நொடிக்கு கூட
பின்தங்காமல் துடிக்கும்
இதயம்
ஒருவருக்காகவே துடிக்க
ஆரம்பித்தால்
அதுவே நிஜமான பாசம்


நிழலாக இருந்த காதல்
அருகில் வந்தவுடன்
ஒளியாய் மாறிவிடும்

நெருங்கிய அழுத்தம்
உணர்வுகளின்
எல்லைகளை தாண்டி
ஒரு புதிய உலகை
உருவாக்கும்

மெல்லிய குரலில்
சொன்ன பெயர்
மனதை தழுவுகிறது

தேகம் அருகில் வந்தால்
ஆசை மெதுவாக
விழித்தெழுகிறது

## வாழ்க்கை தத்துவம்...



நண்பர்களைப் பற்றி
நல்லது பேசு
விரோதியைப் பற்றி
ஒன்றும் பேசாதே

விக்கலுக்கு பயந்தால்
வயிறு நிறையாது
சிக்கலுக்கு பயந்தால்
வாழ்க்கை மகிழாது

அடுத்த நிமிடம் நிச்சயம்
இல்லாத வாழ்க்கை
முடிந்தவரை யாரையும்
காயப்படுத்தாமல் வாழ
கற்றுக் கொள்ளுங்கள்

# கிளப் ஹவுஸ் ராஜதந்திரம்

அது சென்னையில் உள்ள ஒரு பிரம்மாண்டமான அப்பார்ட்மெண்ட் வளாகம். சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் வசிக்கும் அந்தப் பகுதியில், ஞாயிற்றுக்கிழமை மாலை கிளப் ஹவுஸ் களைகட்டியிருந்தது.

பொதுவாக அங்கே கூட்டம் குடும்ப நிகழ்வுகள் சிறு கூட்டங்கள் ஜிம் லைப்ரரி பரதம் யோகா டான்ஸ் ஆட்டம், காபி டிபன் அரட்டை என பல நடக்கும்.

ஆனால் அன்று, அசோசியேஷன் தலைவர் 'பஞ்சாட்சரம்' தலைமையில் ஒரு அவசரக் கூட்டம் கூடியிருந்தது. பஞ்சாட்சரம் தனது கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு மைக் பிடித்தார்.

"நண்பர்களே, இது நம் அப்பார்ட்மெண்ட் கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயம். கடந்த பத்து நாட்களாக நம் கிளப் ஹவுஸ் ஜிம்மில் இருக்கும் ஒரு கிலோ எடை கொண்ட 'டம்பெல்' (Dumbbell) ஒன்று மர்மமான முறையில் காணாமல் போயிருக்கிறது. சிசிடிவி கேமராவில் பார்த்தால், ஜிம்மிற்குள் நுழையும்போது எல்லோரும் வெறும் கையோடு வருகிறார்கள், போகும்போதும் அப்படியே போகிறார்கள். இது ஒரு 'இன்விசிபிள்' திருட்டாக இருக்கிறது!" என்று சீரியஸாக முழங்கினார்.

கூட்டத்தில் முணுமுணுப்பு அதிகமானது. "ஒரு கிலோ எடையைத் தூக்கிட்டுப் போய் என்ன பண்ணப் போறாங்க? ஊறுகாய் ஜாடிக்கு முட்டு கொடுக்கவா?" என்று ஒருவர் கிண்டலாகக் கேட்க, பஞ்சாட்சரம் முறைத்தார்.


அப்போது ஐடி துறையில் வேலை செய்யும் கார்த்திக் மெதுவாக எழுந்து நின்றான். "சார், பதற்றப்படாதீங்க. அந்த டம்பெல் எங்கேயும் திருடு போகல. அது கிளப் ஹவுஸ்ஸோட 'பாதுகாப்புப் பணியில்' இருக்கு" என்றான் ரகசியமாக. பஞ்சாட்சரம் குழப்பத்துடன், "என்ன சொல்கிறாய் கார்த்திக்? ஜிம் உபகரணம் எப்படி பாதுகாப்புப் பணிக்கு வரும்?" என்றார்.

கார்த்திக் சிரித்துக்கொண்டே, "நம்ம கிளப் ஹவுஸ் லிஃப்ட் கதவு போன வாரத்திலிருந்து சரியாக மூடாமல் இழுத்துக்கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும்தானே? டெக்னீஷியன் வர லேட்டாகும் என்பதால், லிஃப்ட் கதவு 'டேக்-ஆஃப்' ஆகாமல் இருக்க ஒரு வெயிட் தேவைப்பட்டது. நம் செக்யூரிட்டி பழனிசாமி அண்ணன்தான் அதை எடுத்து லிஃப்ட் கதவின் கீழே முட்டுக்கொடுத்து வைத்துள்ளார்.

இப்போது அந்த டம்பெல் தான் லிஃப்டைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது!" என்றான்.

அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து நிற்க, அப்போது அங்கே வந்த செக்யூரிட்டி பழனிசாமி, "சார்... நீங்கதானே போன வாரம் வாக்கிங் போகும்போது, 'என்ன பழனிசாமி, கதவு இடிக்குது... எதையாவது கனமா எடுத்து முட்டு குடு'ன்னு சொன்னீங்க. அங்க இருந்த எடைக் கல்லுல அதுதான் எனக்கு லேசா தெரிஞ்சுது, அதான் எடுத்து வச்சேன்" என்றார் வெகுளியாக.

பஞ்சாட்சரம் தன் தலையில் அடித்துக்கொண்டார். "நான் சொன்னது வேற... நீ செஞ்சது வேற! உடனே அதை எடுத்து ஜிம்ல வச்சிட்டு, ஒரு செங்கல்லை எடுத்து அங்கே வை" என்று உத்தரவிட்டார். கிளப் ஹவுஸ் முழுவதும் சிரிப்பொலி அடங்க நீண்ட நேரம் ஆனது.



வெ.நாராயணன்
லால்குடி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*13. டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*

*விடை: WASHING(TON) தான்.*

*14. எல்லா ஆவியையும் பிடிக்கலாம் ஆனால் ஒரே ஒரு ஆவியை மட்டும் பிடிக்க முடியாது அது என்ன..?*

*விடை: கொட்டாவி.*



## தினம் ஒரு சமையல்



# உளுந்து வடை

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| வெள்ளை உளுந்து | - 1/2 கிலோ |
| வெங்காயம் | - 1 |
| துண்டு இஞ்சி | - 1 |
| ஸ்பூன் மிளகு | - 1 |
| கருவேப்பிலை | - 10 |
| உப்பு | |
| அரிசி மாவு | - 3 ஸ்பூன் |
| பச்சை மிளகாய் | - 4 |
| பொறிப்பதற்கு எண்ணெய் | |

**செய்முறை:**




உளுந்தை இரண்டு முறை கழுவி நான்கு மணி நேரம் ஊற வைக்கவும். நன்றாக ஊறிய உளுந்தை கிரைண்டரில் சேர்த்து தண்ணீருக்கு பதிலாக ஐஸ் கட்டிகள் சேர்த்து அரைத்து எடுக்கவும்.

வெங்காயம் இஞ்சி பச்சை மிளகாய் கறிவேப்பிலை ஆகியவற்றை பொடியாக நறுக்கி உளுந்து மாவில் சேர்க்கவும் இதோடு அரிசி மாவு மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கலக்கவும்.

ஸ்டவ்வில் கடாய் வைத்து பொரிக்க தேவையான அளவு எண்ணெய் ஊற்றி எண்ணெய் நன்றாக காய்ந்ததும் தயார் செய்த மாவில் இருந்து வடைகளை தட்டி நடுவில் ஓட்டை போட்டு எண்ணெயில் சேர்த்து பொரித்து எடுக்க வேண்டும்.

## விஷ்ணு கிரந்தி பயன்கள்



விஷ்ணு கிராந்தி மூலிகையை சாப்பிடுவதால் அஸ்தி சுரம் எனும் எலும்பைத் தாக்கும் காய்ச்சல் விலகி போகும். இளைத்த சருமம் கொழுகொழுப்பாய் மாறும் மற்றும் கண்பார்வை, சுவாசத்தை சீராக்கும்.

விஷ்ணுகிராந்தியை மூலிகையை வேரோடு எடுத்து தினமும் நெல்லிக்காய் அளவு எடுத்து, பாலில் அரைத்து சாப்பிட்டால் மறந்து போன நினைவுகள் திரும்பவும் வரும்.

விஷ்ணு கிராந்தி செடியை காயவைத்து பொடி செய்து தேன் அல்லது வெந்நீரில் சாப்பிட்டு வர ஒருமல், சளி, உட்சூடு, காய்ச்சல் முதலியவை குணமாகும்.

விஷ்ணு கிராந்தி இலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து ஒரு ஸ்பூன் எடுத்து வெந்நீரில் கலக்கி சாப்பிட்டு வந்தால் இருமல், இரைப்பு நோய் குணமாகும்.

விஷ்ணு கிராந்தி இலையை சுண்டடைக்காய் அளவு அரைத்து சாப்பிட வயிற்றில் உள்ள புழுக்கள் வெளியாகும். சீதபேதி குணமாக விஷ்ணு கிராந்தி வேர், இலை, தண்டு, பூ என அனைத்தையும் அரைத்துக் பாக்கு அளவு தயிரில் கொடுக்க குணமாகும்.

விஷ்ணு கிராந்தி செடியை காயவைத்து பொடி செய்து தேன் அல்லது வெந்நீரில் சாப்பிட்டு வர இருமல், சளி, உடல் சூடு, காய்ச்சல், முதலியவை குணமாகும்.

டெங்கு காய்ச்சல் குணமாக சுக்கு, மிளகு, திப்பிலி, நறுக்கு மூலம், சித்தரத்தை, தானிப்பச்சரிசி, கோஸ்டம், அதிமதுரம், அக்கரா பரங்கிப்பட்டை, கோரைக்கிழங்கு, பற்பாடகம், சீந்தில்கொடி, நிலவேம்பு, பேய்குடல் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து பொடி செய்து கொள்ள வேண்டும்.

இந்தப்பொடியை விஷ்ணுகிராந்தி வேர் - 6, கீழாநெல்லி வேர் - 6, ஆடாதொடை இலை - 8 ஆகிய மூலிகைகளை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி இந்த மூலிகைகளுடன் சேர்த்து 4 லிட்டர் தண்ணீர் கலந்து 2 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். ஊறிய பிறகு இதை ஒரு லிட்டராகச் வற்றும் வரை காய்ச்சி வடிகட்டி தேவைக்கு ஏற்ப பனங்கற்கண்டு அல்லது பனைவெல்லம் கலந்து பருகலாம்.

# பல வருடங்களுக்கு பின் ரஜினியுடன் இணைந்து நடிக்கும் 56 வயது நடிகை.. யார் தெரியுமா?



சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் அடுத்ததாக வெளிவரவிருக்கும் திரைப்படம் ஜெயிலர் 2. பிரம்மாண்ட பொருட்செலவில் உருவாகி வரும் இப்படத்தை நெல்சன் திலீப்குமார் இயக்க, சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது, அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தில் ரஜினிகாந்துடன் இணைந்து சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், சுராஜ், எஸ்.ஜே. சூர்யா, மிர்னா, யோகி பாபு என பலரும் நடித்துள்ளனர். மேலும், பாலிவுட் கிங் கான் ஷாருக்கான் இப்படத்தில் கேமியோ ரோலில் நடித்துள்ளாராம். வருகிற ஜூன் மாதம் இப்படம் வெளிவரும் என திரை வட்டாரத்தில் பேசப்படுகிறது.

இந்த நிலையில், ஜெயிலர் 2 படத்தில் பல வருடங்களுக்கு பின் பிரபல நடிகை ஒருவர் ரஜினியுடன் இணைந்து நடித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் வேறு யாருமில்லை, நடிகை ஷோபனாதான். ரஜினிகாந்துடன் இணைந்து தளபதி திரைப்படத்தில் ஷோபனா நடித்திருந்தார். அதன்பின் தற்போது ஜெயிலர் 2 படத்தில் நடித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அவர் எந்த கதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்பதை பற்றி தெரியவில்லை.



## சினிமா

Gaddar awards நிகழ்ச்சிக்கு சோபிதா மிகவும் கவர்ச்சியாக ட்ரான்ஸ்பரெண்ட் சேலையில் சென்று இருக்கிறார். அது Sabyasachi சேலை என அவர் கூறி இருக்கிறார்.

வைரலாகும் ஹாட் புகை படங்கள் இதோ பாருங்க.

# துரந்தர் 2 படத்திற்காக ரன்வீர் சிங் மற்றும் சாரா அர்ஜுன் வாங்கிய சம்பளம்.. முழு விவரம் இதோ



பாலிவுட் திரையுலகில் பிரபலமான இயக்குநர்களில் ஒருவர் ஆதித்யா தார். இவர் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளிவந்த துரந்தர் திரைப்படம் மாபெரும் வரவேற்பை பெற்று வெற்றியடைந்தது.

இதன் வெற்றியை தொடர்ந்து துரந்தர் 2 படத்தின் மீது அதீத எதிர்பார்ப்பு உண்டானது. அத்தகைய எதிர்பார்ப்புடன் கடந்த 19ஆம் தேதி வெளிவந்த துரந்தர் 2 திரைப்படத்திற்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்திருந்தாலும், வசூலில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இப்படத்தில் கதாநாயகனாக ரன்வீர் சிங் மற்றும் கதாநாயகியாக சாரா அர்ஜுன் நடித்திருந்தனர். இந்த நிலையில், இப்படத்தில் நடித்ததற்காக ரன்வீர் சிங் மற்றும் சாரா அர்ஜுன் வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, ரன்வீர் சிங் ரூ. 50 கோடியும், சாரா அர்ஜுன் ரூ. 1 கோடியும் சம்பளமாக வாங்கியுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றனர்.

# ஐயன் ஐயப்பனின் புகழ் பாடும் 'ஹரிவராசனம்' பாடல் முழுமையான அர்த்தம்!

கார்த்திகை மாதம் பிறந்துவிட்டது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்பது போல் தற்போது எங்கு பார்த்தாலும் ஐயன் ஐயப்பனை சபரிமலை வந்து தரிசிக்க மாலை அணிந்து கடும் விரதம் மேற்கொண்டு வரும் ஐயப்ப பக்தர்களை காண முடியும். அடுத்து ஒரு மண்டல காலம் வரை எங்கும் ஐயப்ப கோஷமும், அவர் புகழ் பாடும் பாடல்களும் நமது காதுகளில் ரீங்காரமிடும். கல்லிடைக்குறிச்சியை சேர்ந்த கம்பங்குடி சுந்தரம் குளத்து ஐயர் இயற்றி, கே.ஜே. யேசுதாஸ் அவர்களின் இனிமையான குரலில், பெருவாரியான ஐயப்ப பக்தர்கள் விரும்பிக் கேட்டும் பாடலான, 'ஹரிவராசனம்' பாடலின் பொருளை அறிவோம்; பக்தியோடு அதைப் பாடிக் களிப்போம்!







'ஹரிவராசனம்
விஸ்வமோகனம்
ஹரிததீஸ்வரம்
ஆராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம்
நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: அரியாகிய திருமாலின் ஆசிகள் நிறைந்தவர், பேரண்டத்தை இயக்குபவர், அரியின் அருளின் சாராம்சமாக இருப்பவர், உமது தெய்வீகப் பாதங்களை வணங்குகிறோம். தீய சிந்தனைகளை அழிப்பவரே, இந்த அண்டத்தை ஆள்பவரே, அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'சரணகீர்த்தனம்
பக்தமானஸம்
பரணலோலுபம்
நர்த்தனாலயம்
அருணபாசுரம்
பூதநாயகம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: சரண் அடைவோரின் பாடலை விரும்புபவர், பக்தர்களின் மனதில் நிறைந்தவர், பக்தர்களை ஆள்பவர், ஆடலை விரும்புபவர், உதிக்கும் சூரியன் போல பிரகாசிப்பவரே, உயிர்களின் வேந்தரே, அரி மற்றும் அரனின் புதல்வரே உங்களைச் சரணடைந்தோம்!

'பிரணயசத்யகம்
பிராணநாயகம்
ப்ரணதகல்பகம்
சுப்ரபாஞ்சிதம்
பிரணவமந்திரம்
கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: உண்மையின் உணர்வாக இருப்பவர், எல்லா உள்ளங்களின் விருப்பமாக இருப்பவர், பேரண்டத்தைப் படைத்தவர், சுடரொளி வீசும் ஒளிவட்டமாய் திகழ்பவர், 'ஓம்' எனும் மந்திரத்தின் ஆலயம் நீங்கள்; பக்தர்களின் பாடல்களை விரும்புபவர் நீங்கள்; அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'துரகவாகனம்
சுந்தரானனம்
வரகதாயுதம்
தேவவர்ணிதம்
குருகிருபாகரம்
கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: குதிரையை வாகனமாகக் கொண்டவரே, அழகிய திரு உருவம் கொண்டுள்ளவரே, ஆசிர்வதிக்கப்பட்ட தண்டாயுதத்தை ஏந்துபவர், ஒய்யாரமானவர்; என்னுடைய குரு நீங்கள். பக்தர்களின் பாடல்களை விரும்புபவரே, அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'திரிபுவனார்ச்சிதம்
தேவதாத்மகம்
திரிநயன பிரபும்
திவ்யதேசிகம்
திரிதசப்பூஜிதம்
சிந்திதப்பிரதம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: மூவுலகாலும் வணங்கப்படுபவர், கடவுளர்களின் ஆன்மாவாகத் திகழ்பவர், சிவனின் உருவமாக இருப்பவர், தேவர்களால் வணங்கப்படுபவர்; உங்களை தினந்தோறும் மூன்று முறை வணங்குகிறோம். எங்கள் மனம் நிறைந்தவர் நீங்கள்; அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'பவபயாபகம்
பாவுகாவகம்
புவனமோகனம்
பூதிபூசணம்
தவளவாகனம்
திவ்யவாரணம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: அச்சத்தை அழிப்பவர், செழிப்பை கொணர்பவர், இந்த அண்டத்தை ஆள்பவர், திருநீற்றை ஆபரணமாக அணிந்தவர், வெள்ளை யானையை வாகனமாகக் கொண்டவர் நீங்கள். அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'களம்ருதுஸ்மிதம்
சுந்தரானனம்
களபகோமளம்
காத்ரமோகனம்
களபகேசரி
வாஜிவாகனம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: இனிமையான, மிருதுவான புன்முறுவல் உடையவரே, அழகிய திருமுகத்தை உடையவரே, இளமையும், மென்மையும் உடையவர். சொக்க வைக்கும் பேரழகையும், யானை, சிங்கம், குதிரை போன்றவற்றை வாகனமாகவும் கொண்டவர் நீங்கள். அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

'ச்ரிதஜனப்ரியம்
சிந்திதப்ரிதம்
ச்ருதிவிபூஷணம்
சாதுஜீவனம்
ச்ருதிமனோகரம்
கீதலாலசம்
ஹரிஹராத்மஜம்
தேவமாஷ்ரயே'

பொருள்: பக்தர்களால் நேசிக்கப்படுபவர், பக்தர்களின் வேண்டுதல்களை பூர்த்தி செய்பவர், வேதங்களால் துதிக்கப்படுபவர், ஞானியரை ஆசிர்வதிப்பவர். வேதங்களின் சாராம்சம் நீங்கள்; தெய்வீக இசையை ரசிப்பவர் நீங்கள். அரி மற்றும் அரனின் புதல்வரே, உங்களைச் சரணடைந்தோம்!

பாடலின் பொருளையும் அது கூறும் பெருமையையும் ஆழ்ந்து உணர்ந்து, ஒரு பாடலை பாடும்போதும் அல்லது கேட்கும்போதும் அதன் மூலம் கிடைக்கும் சுகானுபவமே தனிதான் இல்லையா? ஐயன் ஐயப்பன் புகழை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் பாடி பரிபூரணமாக அவனை வணங்குவோம்; நித்தம் நித்தம் அவன் அருளைப் பெறுவோம்! ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா!



ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# பசந்த குமார் பிஸ்வாஸ் வரலாறு

பசந்த குமார் பிஸ்வாஸ் (6 பிப்ரவரி 1895 - 11 மே 1915) ஜுகந்தர் குழுவில் ஈடுபட்ட ஒரு இந்திய சுதந்திர ஆதரவு ஆர்வலர் ஆவார் , அவர் டிசம்பர் 1912 இல், டெல்லி-லாகூர் சதி என்று அறியப்பட்ட வைஸ்ராயின் அணிவகுப்பில் குண்டுவீச்சு நடத்தியதில் பங்கு வகித்தார் . வங்காளத்திலும் முழு நாட்டிலும் ஆரம்பகால சுதந்திர ஆதரவு ஆர்வலர்களில் பிஸ்வாஸும் ஒருவர் . அவர் வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணராக இருந்தார், மேலும் ஜுகந்தர் தலைவர்களான அமரேந்திரநாத் சட்டோபாத்யாயா மற்றும் ராஷ் பிஹாரி போஸ் ஆகியோரால் புரட்சிகர இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டார் .

ஆரம்ப கால வாழ்க்கை

பசந்தா குமார் பிஸ்வாஸ், இன்றைய மேற்கு வங்காளத்தின் நாடியா மாவட்டத்தில் உள்ள ஒரு வங்காள இந்து பிரபுத்துவ மகிஷ்ய குடும்பத்தில் , மோதிலால் பிஸ்வாஸ் மற்றும் குஞ்சபாலா தேவி ஆகியோருக்கு 1895 பிப்ரவரி 6 அன்று போராகச்சா கிராமத்தில் பிறந்தார் . அவரது மூதாதையர் (தாத்தா), திகம்பர் பிஸ்வாஸ், பணப்பயிரை கட்டாயமாக பயிரிடுவதற்கு எதிராக இண்டிகோ கிளர்ச்சியின் ( நீல் பித்ரோஹா, 1859 ) தீவிரத் தலைவராகப் புகழ் பெற்றார், மேலும் சுதந்திரப் போராட்ட வீரர் மன்மதநாத் பிஸ்வாஸ் அவரது உறவினர் ஆவார். சமூக சீர்திருத்தவாதி மற்றும் தொழிலதிபர் ககன் சந்திர பிஸ்வாஸால் நிறுவப்பட்ட அருகிலுள்ள மாதவ்பூர் கிராமத்தில் உள்ள எம்.ஐ. பள்ளியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடங்கினார் , அவரது உறவினர் மன்மதநாத் பிஸ்வாஸுடன். 1906 ஆம் ஆண்டில், பசந்தா முராகச்சா பள்ளிக்கு மாற்றப்பட்டார் , அங்கு அவர் நுழைவுத் தேர்வு வரை படித்தார் . முராகச்சா பள்ளியின் தலைமை ஆசிரியரான கீரோத் சந்திர கங்குலியின் வழிகாட்டுதலின் கீழ் , பசந்தா தனது சுதந்திரப் போராட்டப் பயணத்தைத் தொடங்கினார்.







ATTENTAT CONTRE LORD HARDINGE, VICE-ROI DES INDES

இந்தப் பள்ளியில் மாணவராக இருந்தபோது, போராகச்சா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நடந்த சுதேசி போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். 1907 ஆம் ஆண்டு, தனது படிப்பை விட்டுவிட்டு, 1910 ஆம் ஆண்டு உத்தர்பராவில் உள்ள ஒரு சுதேசி துணிக்கடையில் வேலை செய்தார், ஆனால் அதை விட்டுவிட்டு இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் பூரிக்குச் சென்று , இறுதியில் பனாரஸுக்குச் சென்று , அங்கு ராமகிருஷ்ணா மிஷனில் தங்கினார் . அடுத்த ஆண்டு அவர் டேராடூனில் ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்தார் , அவரால் பணியமர்த்தப்பட்டார். போஸ் அவருக்கு ஆயுதங்கள் மற்றும் குண்டுகளில் பயிற்சி அளித்தார், மேலும் அவரை அன்பாக பிஷே என்று அடிக்கடி அழைத்தார் .

நாடியாவின் போராகச்சாவில் உள்ள பசந்த குமார் பிஸ்வாஸின் பிறந்த இடத்திற்கு அருகில் அவரது நினைவுச்சின்னம்

புரட்சிகர நடவடிக்கைகள்

பசந்த குமார் பிஸ்வாஸ், ஜுகந்தர் குழுவில் உறுப்பினராக இருந்தார் , அவரது அமைப்புத் திறமைகளுக்கு பெயர் பெற்றவர் மற்றும் கல்கத்தா ஜுகந்தர் அலுவலகத்திற்கும் சந்தன்நகரில் உள்ள 'சக சதிகாரர்களுக்கும்' இடையே ஒரு முக்கியமான இடைத்தரகராக இருந்தார் . டேராடூனில் ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்த பிறகு, அவர் அரசியல் ரீதியாகப் பயிற்றுவிக்கப்பட்டார் மற்றும் அவரது பணியை நிறைவேற்றுவதற்கான நடைமுறை பயிற்சிகளைக் கற்றுக்கொண்டார். 1912 அக்டோபரில் போஸால் லாகூருக்கு அழைத்து வரப்பட்டு, அங்கு தனது பஞ்சாபி கூட்டாளிகளுடன் தங்கினார். லாகூரில் அவர் ஒரு பிரபலமான மருந்தகத்தில் ஒரு கம்பவுண்டராகப் பணியாற்றினார். இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லார்ட் ஹார்டிங்கின் மீது குண்டு வீசும் சதியில் பிஸ்வாஸ் பங்கேற்றார் . 1912 டிசம்பர் 23 அன்று, டெல்லி இந்தியாவின் தலைநகராக பதவியேற்றதைக் குறிக்கும் ஒரு மாநில ஊர்வலத்தில் லார்ட் ஹார்டிங்க் டெல்லியின் சாந்தினி சவுக் வழியாகச் சென்றபோது, இது அவரால் மேற்கொள்ளப்பட்டது. பெண்கள் உடையில், பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வைஸ்ராயின் பாதையை நோக்கிய ஒரு கூரைக்குச் சென்றார். அவர் மற்ற பார்வையாளர்களுக்கு லட்சுமிபாய் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார் - இது ஜான்சியின் பிரபலமான ராணியைக் குறிக்கிறது . ஊர்வலம் பிஸ்வாஸ் காத்திருந்த கூரை வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, ஒரு குண்டு கீழே விழுந்து வைஸ்ராயின் பின்னால் வெடித்தது. ஹார்டிங்க் பலத்த காயமடைந்தார், அவருக்குப் பின்னால் இருந்த வேலைக்காரன் தனது குடையாணியைப் பிடித்திருந்தான். தனது வேலை முடிந்தவுடன் பசந்தா தெருவில் இறங்கி தனது சேலையைக் கழற்றி கூட்டத்திற்குள் மறைந்தார். அவர் பஞ்சாபிற்குத் திரும்பினார், அங்கு அவர் தனது புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொண்டார். மாநிலத்தின் தீவிர விசாரணை மற்றும் இலாபகரமான வெகுமதி இருந்தபோதிலும், பத்திரத்தின் ஆசிரியர்கள் பல மாதங்களாக தெளிவற்றவர்களாகவே இருந்தனர்.

பிஸ்வாஸ் 1914 பிப்ரவரி 26 அன்று நாடியாவின் போராகச்சாவில் தனது தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்யச் சென்றபோது கைது செய்யப்பட்டார்.

1913 மே 17 அன்று லாகூரில் உள்ள லாரன்ஸ் கார்டனில் குண்டு வீசியதாகவும், அதில் ஒரு பியூன் கொல்லப்பட்டதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. டெல்லி-லாகூர் சதி வழக்கு என்று அழைக்கப்பட்ட இந்த வழக்கு விசாரணை 1914 மே 23 அன்று டெல்லியில் தொடங்கியது; அமீர் சந்த் , அபாத் பெஹாரி மற்றும் பாய் பால்முகுந்த் ஆகியோருக்கு விசாரணையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது, மேலும் பசந்தா பிஸ்வாஸ் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது, ஆனால் ஆரம்பத்தில் அவருக்கு பதினேழு வயது மட்டுமே என்பதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

வைஸ்ராய் ஹார்டிங் மீது பிஸ்வாஸால் படுகொலை முயற்சி லாகூர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது . அரசர் தனது மேல்முறையீட்டை வென்றார், பிஸ்வாஸுக்கு தூக்கிலிட தண்டனை விதிக்கப்பட்டது.

பசந்த குமார் பிஸ்வாஸ் 1915 மே 11 அன்று பஞ்சாபில் உள்ள அம்பாலா மத்திய சிறையில் இருபது வயதில் தூக்கிலிடப்பட்டார் , மேலும் 20 ஆம் நூற்றாண்டில் இந்திய புரட்சிகர போராட்டங்களின் போது தூக்கிலிடப்பட்ட இளையவர்களில் ஒருவரானார்.

நாடியாவில் உள்ள ஒரு பள்ளியில் பசந்தா பிஸ்வாஸின் சிலை ஜப்பானின் டோக்கியோவில் உள்ள ஒரு பூங்காவில் ராஸ்பிஹாரி பாசுவால் பசந்தா பிஸ்வாஸின் சிலை நிறுவப்பட்டுள்ளது . மற்றொரு சிலை நதியாவின் கிருஷ்ணாநகரில் உள்ள ரவீந்திர பவன் முன் அமைந்துள்ளது . டெல்லியின் சிவில் லைன்ஸில் உள்ள ஒரு பள்ளிக்கு அவரது நினைவாக "ஷாஹீத் பசந்த் குமார் பிஸ்வாஸ் சர்வோதய வித்யாலயா" என்று பெயரிடப்பட்டது. பின்னர் அது ராஜ்கியா பிரதிபா விகாஸ் வித்யாலயா என மறுபெயரிடப்பட்டது . மக்களவை சபாநாயகர் மீரா குமார் இந்திய நாடாளுமன்ற அருங்காட்சியகத்தில் பசந்தா குமாரின் புகைப்படத்தை நிறுவியுள்ளார் . இந்திய அரசியல்வாதியும் மேற்கு வங்க அரசாங்கத்தில் தற்போதைய அமைச்சருமான உஜ்ஜல் பிஸ்வாஸ் , பசந்தா பிஸ்வாஸின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அமைச்சர் கடந்த 30 ஆண்டுகளாக பிப்ரவரி மாதத்தில் தனது கிராம வீட்டில் பசந்தா மேளா என்ற மூன்று நாள் கண்காட்சியை ஏற்பாடு செய்து வருகிறார் .

# ஏஐ மூலம் பிரதமர் மோடியின் படம் தவறாகச் சித்திரிப்பு: ஒருவர் கைது



**புதுடெல்லி, மார்ச் 23:**

செய்யறிவு மூலம் பிரதமர் நரேந்திர மோடியின் படத்தைச் சித்திரித்து தவறாக வழிநடத்தியதாக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

செயற்கை நுண்ணறிவு மூலம் பிரதமர் மோடியின் படத்தைச் சித்திரித்து, அதனை சமூக ஊடகங்களில் வெளியிட்டு, தவறான தகவல்களைப் பரப்பி தவறாக வழிநடத்தியதாகவும், பிரதமர் குறித்த ஏற்கத்தகாத படங்களைப் பதிவிட்டு, பொது ஒழுங்கைச் சீர்குலைப்பதாக காவல்துறையில் புகார் வந்தது.

இதனைத் தொடர்ந்து, தில்லி காவல்துறையின் நடத்திய விசாரணையில், பிகாரை சேர்ந்த ஒருவர்தான் தவறாக வழிநடத்துவது தெரிய வந்தது.

இதனையடுத்து, உள்ளூர் போலீஸாருடன் இணைந்து நடத்திய விசாரணையில் ஏஐ படங்களைச் சித்திரித்து வெளியிட்டது சித்தநாத் குமார் என்பது தெரிய வந்து, அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அதுமட்டுமின்றி, பாஜக பெண் எம்எல்ஏ மற்றும் வெளிநாட்டு பெண் தலைவர் ஒருவரையும் சித்தநாத் குமார் தவறாக சித்திரித்து வெளியிட்டதும் விசாரணையில் தெரிய வந்தது.

மேலும், சித்தநாத்தை கைது செய்த போலீஸார், மேல் விசாரணைக்காக அவரை தில்லிக்கு அழைத்துச் சென்றனர்.

# பெங்களூருவில் வீடு புகுந்து சிலிண்டர் திருட்டு – போலீஸ் விசாரணை

**பெங்களூரு, மார்ச் 23:**

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூருவில் ஓட்டல்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான சிலிண்டர் வினியோகம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பெங்களூருவில் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக சுமார் 25 ஆயிரம் ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் தினசரி உணவு தேவைக்காக ஓட்டல்களை நம்பியுள்ள மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல் தொழிலை நம்பி இருப்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பெங்களூருவில் வீடு புகுந்து சிலிண்டர்கள் திருடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



நேற்று உகாதி பண்டிகை கொண்டாடப்பட்ட சூழலில், இந்த திருட்டு சம்பவம் பெங்களூருவில் அரங்கேறியுள்ளது. இது தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன. அந்த வீடியோவில் ஹெல்மெட் அணிந்த 2 நபர்கள் ஒரே ஸ்கூட்டரில் ஒரு வீட்டின் முன்பு வந்து நிற்கின்றனர். ஒரு நபர் வீட்டிற்கு வெளியே நிற்க, மற்றொரு நபர் ஸ்கூட்டருடன் வீட்டின் கேட்டை தாண்டி உள்ளே செல்கிறார். பின்னர் சிறிது நேரம் கழித்து 2 சிலிண்டர்களுடன் அவர் வெளியே வருகிறார். தொடர்ந்து இருவரும் ஸ்கூட்டரில் ஏறி அங்கிருந்து தப்பிச் செல்கின்றனர்.

இந்த திருட்டு சம்பவம் பெங்களூருவின் பேகூர் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் அளித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பெங்களூருவில் சிலிண்டர் தட்டுப்பாடு தீவிரமடைந்து வரும் நிலையில், வீடு புகுந்து சிலிண்டர் திருடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அதிகாரி தற்கொலை விவகாரம்: பஞ்சாப் மந்திரி திடீர் ராஜினாமா

**புதுடெல்லி, மார்ச் 23:**

பஞ்சாப் மாநிலம் அமிர்தரசில் உள்ள கிடங்கு கழகத்தின் மாவட்ட மேலாளரான ககன் தீப் சிங் ரந்தா நேற்று முன் தினம் இரவு அளவுக்கு அதிகமான மாத்திரைகள் தின்று தற்கொலை செய்துகொண்டார். அவர் தற்கொலைக்கு முன்பாக வெளியிட்ட வீடியோவில் தனது இந்த விபரீத முடிவுக்கு மந்திரி லால்ஜி சிங் புல்லர் காரணம் என்று குற்றம் சாட்டி இருந்தார்.

மனதை உலுக்கும் இந்த 12 வினாடி வீடியோ பஞ்சாப் அரசியலில் பெரும் புயலை கிளப்பியது. அந்த வீடியோவில், தனது மன உளைச்சலுக்கும் மரணத்திற்கும் சில தனிநபர்களே காரணம் என்று குற்றம் சாட்டினார். குறிப்பாக மந்திரி லால்ஜித் சிங் புல்லரின் பெயரை நேரடியாக குறிப்பிட்டார். இந்த வீடியோ பஞ்சாப் அரசியலில் பெரும் புயலை கிளப்பியது. இதற்கு காரணமான மந்திரி லால்ஜித் சிங் புல்லரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. இதனை தொடர்ந்து உர்ய விசாரணை நடத்துமாறு முதல்-மந்திரி பகவந்த் மான் தலைமைசெயலாளர் கே.ஏ.பி. சின்ஹாவுக்கு உத்தரவிட்டார். இந்த சூழலில் போக்குவரத்துறை மந்திரி லால்ஜித் சிங் புல்லர் தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# 12 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: ஆட்டோ டிரைவர் கைது

**கோழிக்கோடு, மார்ச் 23:**

கேரளம் மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தை சேர்ந்தவர் முகமது நூர் (வயது 45). ஆட்டோ டிரைவர். இந்தநிலையில் சேவாயூர் பகுதியை சேர்ந்த தம்பதி, தங்களது 12 வயது மகள் அருகே உள்ள பள்ளிக்கூடத்தில் 6-ம் வகுப்பு படித்து வரும் நிலையில் நேற்றுமுன்தினம் காலை தேர்வு எழுத பள்ளிக்கூடத்திற்கு ஆட்டோவில் அனுப்பி வைக்க முடிவு செய்தனர். அதன்படி அவர்கள் முகமது நூரை அழைத்து, மகளை ஆட்டோவில் பள்ளிக்கூடத்தில் விட கூறினர். இதன்படி முகமது நூரும் சிறுமியை ஆட்டோவில் ஏற்றி பள்ளிக்கூடத்திற்கு அழைத்து சென்றார். அப்போது செல்லும்வழியில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து அவர் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தார். இதுகுறித்து சேவாயூர் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆட்டோ டிரைவர் முகமது நூரை கைது செய்தனர்.

# ஆந்திராவில் நடுரோட்டில் தீப்பிடித்து எரிந்த ஆம்னி பேருந்து - 37 பயணிகள் உயிர் தப்பினர்



**அமராவதி, மார்ச் 23:**

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இருந்து ஆந்திர மாநிலம் மங்கல்கிரி நோக்கி தனியார் ஆம்னி பேருந்து சென்று கொண்டிருந்தது. அந்த பேருந்து விசாகப்பட்டினம் அருகே உள்ள தாராபுரம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, அதன் பின் பக்க டயர் எதிர்பாராதவிதமாக வெடித்துச் சிதறியுள்ளது.

இதில், பேருந்து தீப்பிடித்து எரிந்த நிலையில், சுதாரித்துக் கொண்ட ஓட்டுநர் பயணிகளை எச்சரித்து, உடனே கீழே இறங்குமாறு அறிவுறுத்தி உள்ளார். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவத்தில் 37 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இருப்பினும் தீயணைப்புத்துறையினர் வருவதற்குள் பேருந்து முழுமையாக எரிந்து சாம்பலானது. இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# உள்நாட்டு விமானக் கட்டணங்களுக்கான உச்ச வரம்பு இன்று முதல் நீக்கம்

**புதுடெல்லி, மார்ச் 23:**

இண்டிகோவின் பெரிய அளவிலான விமானச் சேவை இடையூறுகளால் ஏற்பட்ட டிக்கெட் விலைகளின் அசாதாரண உயர்வைத் தடுப்பதற்காக, உள்நாட்டு விமானக் கட்டணங்களுக்கு டிசம்பர் 6 அன்று தற்காலிக உச்சவரம்பு விதிக்கப்பட்டது. அது முதல் விமானக் கட்டணப் போக்குகளை அமைச்சகம் நிகழ்நேர அடிப்படையில் கண்காணித்து வருகிறது.

இந்த நிலையில் 23-ந்தேதி (நாளை) முதல் விமானக் கட்டண உச்சவரம்பு நீக்கம் செய்யப்படுகிறது.



மேலும் அதிகபட்ச தேவை, இடையூறுகள் அல்லது அவசர காலங்களில், கட்டணங்களில் அதிகப்படியான அல்லது நியாயமற்ற உயர்வு காணப்பட்டால், அது தீவிரமாகப் பார்க்கப்படும் என்றும் அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது.

இந்நிலையில், விமானக் கட்டணங்களுக்கான உச்சவரம்பு நாளை முதல் நீக்கப்படுவதால் விமான டிக்கெட் கட்டணம் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி ஏற்கனவே டிக்கெட் விலையை சில விமான நிறுவனங்கள் உயர்த்தியுள்ள சூழலில் தற்போது அது மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

# அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்தடைந்த எல்பிஜி சரக்குக் கப்பல்!

**மங்களூரு, மார்ச் 23:**

அமெரிக்காவிலிருந்து எல்பிஜி ஏற்றிவந்த சரக்குக் கப்பல் மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவிலிருந்து எல்பிஜி ஏற்றி வந்த சரக்குக் கப்பல், கர்நாடக மாநிலத்தில் உள்ள புதிய மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது. மேலும், மங்களூரு துறைமுகத்துக்கு எல்பிஜி மற்றும் கச்சா எண்ணெய் ஏற்றி வரும் கப்பல்களுக்கு, மார்ச் 31 வரையில் சரக்குக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படுவதாக மத்திய அமைச்சகம் அறிவித்துள்ளது. ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தி வரும்நிலையில், ஈரானும் உரிய பதிலடி கொடுத்து வருகிறது. மேலும், உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் முக்கிய பங்களிக்கும் ஹோர்முஸ் நீரிணையையும் ஈரான் மூடியது. இதனால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் மட்டுமின்றி, எல்பிஜி பற்றாக்குறை ஏற்படலாம் என பொதுமக்கள் பீதியடைந்து, முண்டியடித்துக் கொண்டு பெட்ரோல் வாங்குவதும், எல்பிஜி முன்பதிவு செய்வதுமாய் இருந்தனர். இருப்பினும், நாட்டில் எல்பிஜி பற்றாக்குறை இல்லையென மத்திய அரசு தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறது. இதனிடையே, ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதற்கு உலக நாடுகளிடம் அமெரிக்கா உதவியும் கோரி வருகிறது.

# ‘ரெயில் ஒன்’ செயலியை 2.57 கோடி பயணிகள் பதிவிறக்கம்

**புதுடெல்லி, மார்ச் 23:**

கடந்த 2025-ம் ஆண்டு ஜூலை 1-ந்தேதி அறிமுகம் செய்யப்பட்ட இந்த செயலி, முன்பு தனித்தனியாக இருந்த பல செயலிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ரெயில்வே தொடர் பான அனைத்து சேவைகளையும் ஒரே தளத்தில் பயன்படுத்த முடியும். இதன் மூலம் ஐ.ஆர்.சி.டி.சி. மற்றும் யூ.டி.எஸ். கணக்குகளை பயன்படுத்தி ஒரு முறையில் உள்நுழைந்து அனைத்து சேவைகளையும் பெறலாம். இதற்கிடையே, கடந்த மார்ச் 1-ந்தேதி முதல் யூ.டி.எஸ். செயலி நிறுத்தப் பட்டு, அதன் சேவைகள் முழுமையாக ரெயில் ஒன் செயலிக்குள் மாற்றப் பட்டுள்ளன. இதற்கு மிக முக்கியமான காரணம், வெவ்வேறு ரெயில் செயலிகளை பயன்படுத்தியவர்களை ஒருங்கிணைந்த ரெயில் ஒன் செயலியை பயன்படுத்த வைக்க வேண்டும் என்பதுதான். அதன்படி, தற்போது ரெயில் ஒன் செயலியை பயன்படுத்துவோர் எண்ணிகை வேகமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக, இந்த செயலியை கடந்த பிப்ரவரி மாதம் வரையில் 2 கோடி பயணிகள் பதிவிறக்கம் செய்திருந்தனர். இந்த நிலையில், இந்த மாதத்தில் (மார்ச் 15-ந்தேதி வரை) 57 லட்சம் பயணிகள் பதிவிறக்கம் செய்து மொத்தம் 2.57 கோடி ரெயில் பயணிகள் ரெயில் ஒன் செயலியை பதிவிறக்கம் செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், பயணிகளுக்கு விரைவான மற்றும் எளிதான பயண அனுபவத்தை வழங்கும் முக்கிய டிஜிட்டல் மாற்றமாக ’ரெயில் ஒன்’ செயலி பார்க்கப்படுகிறது.




# ஹார்முஸ் ஜலசந்தியில் சிக்கிய இந்திய கப்பல் கேப்டன் மாரடைப்பால் உயிரிழப்பு



**ராஞ்சி, மார்ச் 23:**

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியை சேர்ந்தவர் ராகேஷ் ரஞ்சன் (வயது 47) இவருக்கு மனைவி மற்றும் பிரவார் (20) ஓம் (16) 2 மகன்கள் உள்ளனர். ராகேஷ் கடந்த 26-ம் ஆண்டுகளாக வணிக கப்பல் படை அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

இவர் கடந்த பிப்.2-ம் தேதி அன்று ஒரு தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான ஏ.எஸ்.பி. அவானா என்ற கப்பலில் கேப்டனாக பணியில் சேர்ந்தார். ஹார்முஸ் ஜலசந்தியில் இருந்து ஒரு எண்ணை கப்பலை வெளியே செலுத்தும் பணியில் அவர் ஈடுபட்டு இருந்தார்.

கடந்த 26-ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் இடையே போர் ஏற்பட்டதால் ஹார்முஸ் நீரினை பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. அந்த வழியாக கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதையடுத்து கடந்த 20 நாட்களாக ரஞ்சன் அந்த கப்பலில் சிக்கி இருந்தார்.

போர் காரணமாக அந்த கப்பல் கடலில் தனது செயல்பாடுகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கேப்டன் ரஞ்சன் சிங் உட்பட சுமார் 35 பணியாளர்களுடன் அந்த கப்பல் துபாய் கடற்கரையில் இருந்து கிட்டத்தட்ட 60 கி.மீ தொலைவில் சுமார் 20 நாட்கள் வரை நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

கடலில் நீண்ட நாட்கள் இருந்தது மற்றும் மன அழுத்தம் காரணமாக கடந்த 18-ம் தேஎதி ரஞ்சன் சிங்கின் உடல்நிலை திடீரென மோசமடைந்தாக கூறப்படுகிறது.

இதனையடுத்து கப்பலில் இருந்த அதிகாரிகள், ஒரு வான்வழி ஆம்புலன்சை கோரி துபாய் விமான போக்குவரத்து அதிகாரிகளை தொடர்பு கொண்டனர். போர் சூழல் காரணமாக தேவையான அனுமதியை உரிய நேரத்தில் பெற முடியவில்லை.

இதை தொடர்ந்து அவர் கப்பலில் இருந்து படகு மூலம் துபாய் கடற்கரைக்கு கொண்டு செல்லப்பட்டார். மருத்துவ சிகிச்சை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

ரஞ்சன் சிங் உயிரிழந்தது குறித்து அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரது மரணத்திற்கான சரியான காரணம் எங்களுக்கு இன்னும் தெரியவில்லை என்றும் நேரத்தை வீண்டடிக்கபடாமல் உஅனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருந்தால் அவரது உயிரை காப்பாற்றி இருக்கலாம் என்று அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டினர்.

# மார்ச் 25ம் தேதி கேரளாவில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கும் ராகுல் காந்தி

**திருவனந்தபுரம், மார்ச் 23:**

கேரளா (140 தொகுதிகள்) மற்றும் அசாம் (126 தொகுதிகள்) ஆகிய மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் (30 தொகுதிகள்) வரும் ஏப்ரல் 9-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதற்கானவாக்குஎண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கேரள மாநிலத்தில் வேட்பு மனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், கேரளாவின் தர்மடம் சட்டமன்ற தொகுதியில் அந்த மாநிலத்தின் முதல்-மந்திரி பினராயி விஜயன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். தர்மடம் தொகுதியில் அவர் 3-வது முறையாக போட்டியிடுகிறார். கடந்த 19-ம் தேதி காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 92 வேட்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், கேரளாவில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்கான தனது தேர்தல் பிரச்சாரத்தை, மூத்த காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, மார்ச் 25ம் தேதியன்று கோழிக்கோட்டில் ஒரு மாபெரும் பேரணியுடன் தொடங்குகிறார். ஏப்ரல் 9-ம் தேதி அன்று நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக, மாநிலத்தில் தனது பிரச்சார பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், இந்த பேரணி மாலையில் கோழிக்கோடு கடற்கரையில் நடைபெற உள்ளது என்று மூத்த காங்கிரஸ் தலைவர் ரமேஷ் சென்னிதலா தெரிவித்தார். அதில் தேர்தலுக்கான முக்கிய வாக்குறுதிகள் குறித்து ராகுல் காந்தி விரிவாக எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

# தாராகிரி’ போர்க் கப்பல்: ஏப்.3-இல் கடற்படையுடன் இணைப்பு

**புதுடெல்லி, மார்ச் 23:**

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ‘தாராகிரி’ ஸ்டெல்த் ரக போர்க் கப்பல் இந்திய கடற்படையில் ஏப்.3-ஆம் தேதி இணைக்கப்படுவதாக அதிகாரிகள் சனிக்கிழமை தெரிவித்தனர். இதற்காக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் கூறுகையில், ‘நீலகிரி வகையின் (திட்டம் 17ஏ) நான்காவது போர்க் கப்பலான தாராகிரி (யார்டு 12653) கடந்த ஆண்டு நவம்பர் 28-ஆம் தேதி கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. மும்பையில் உள்ள மசகான் டாக் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் (எம்டிஎல்) கட்டமைக்கப்பட்ட மூன்றாவது போர்க் கப்பலான தாராகிரி 6,670 டன் எடையுடையது. நமது நாட்டின் பொறியியல் திறன்களின் முழு வெளிப்பாடாகவும், ‘இந்தியாவில் தயாரிப்போம்’ திட்டத்தின் சிறந்த உதாரணமாகவும் இந்தப் போர்க் கப்பல் திகழ்கிறது. எளிதில் கண்டறிய முடியாத வடிவமைப்பு (ஸ்டெல்த்), தாக்கும் திறன், தாமாக இயங்கும் ஆற்றல் என நவீன தொழில்நுட்பங்களுடன் அதி வேகம், பன்முக கடற்சார் செயல்பாடுகள் என தற்சார்பு இந்தியாவின் சின்னமாக தாராகிரி விளங்கிறது.

பல்வேறு ஏவுகணைகள்: இந்தப் போர்க் கப்பலில் தரையில் இருந்து தரை இலக்குகளைத் தாக்கும் சூப்பர்சோனிக் ஏவுகணைகள், தரையில் இருந்து வான் இலக்குகளைத் தாக்கும் நடுத்தர ஏவுகணைகள் மற்றும் சிறப்பு நீர்மூழ்கி எதிர்ப்பு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

உலகத் தரத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள தாராகிரி போர்க் கப்பல் இந்திய கடற்படையில் ஏப்ரல் 3-ஆம் தேதி இணைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்’ என்றனர்.




## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு: கைதான சாயல்குடி ரவுடி மதுரை சிறையில் அடைப்பு

**விளாத்திகுளம், மார்ச்.23:** விளாத்திகுளம் அருகே பிளஸ்-2 மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். கொலை தொடர்பாக 10 தனிப்படைகள் அமைத்து போலீஸார் தேடினர், இந்நிலையில் 9 நாட்களுக்கு பின்பு ராமநாதபுரம் மாவட்டம் சாயல் குடியைச் சேர்ந்த முனியசாமி மகன் மாவீரன் என்ற தர்ம முனீஸ்வரனை (37) கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்தினர்.

விசாரணை செய்த நீதிபதி, தர்ம முனீஸ்வரனை ஏப்.2 வரை, நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார். அதன் பின்னர், பலத்த பாதுகாப்புடன் தர்ம முனீசுவரன் பாளையங் கோட்டை சிறையில் அடைத் தனர். அங்கு அவரது எதிரிகள் சிறையில் இருப்பதால் பாது காப்பு கருதி, மதுரை மத்திய சிறைக்கு மாற்ற முடிவெடுத் தனர். அதன்படி பலத்த பாது காப்போடு அழைத்து வந்த விளாத்திகுளம் போலீஸார் மார்ச் 20-ல் நள்ளிரவில் தர்ம முனீஸ்வரனை மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.

## எழும்பூர் ரயில் நிலையத்தில் ஒரு கிலோ கஞ்சா, ரூ.77,000 சிக்கியது

**எழும்பூர், மார்ச்.23:** எழும்பூர் ரயில் நிலையத்தில் ஆர்பிஎஃப் காவல் ஆய்வாளர் கே.பி.ஜெபஸ்டியன் தலைமையில், ரயில்வே பாதுகாப்புப் படை, தமிழக தேர்தல் பறக்கும் படையினர் இணைந்து நேற்று காலை கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

ரயில் நிலையத்தின் 8-வது நடைமேடையில் ஒரு நபர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்றுகொண்டிருந்தார். அவரது பையை சோதித்தபோது, அதில் ரூ.77,430 ரொக்கம் இருந்தது. ஆனால் இப்பணத்துக்கான ஆவணம் அவரிடம் இல்லை. அவர் ராஜஸ்தானைச் சேர்ந்த ராஜேஷ்குமார் (36) என்பது தெரியவந்தது. அவரையும், பணத்தையும் தமிழக தேர்தல் பறக்கும் படையினரிடம் ஒப்படைத்தனர்.

இதுபோல ஹவுராவில் இருந்து திருச்சிக்கு செல்லும் ரயில் எழும்பூருக்கு நேற்று காலை வந்தது. அதில் பொது பெட்டியில் கேட்பாரற்று ஒரு பை இருந்தது. அதை திறந்து பார்த்தபோது, அதில் ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள ஒரு கிலோ கஞ்சா பொட்டலம் இருந்தது. அதைக் கைப்பற்றி, அண்ணா நகர் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்து, கஞ்சாவை எடுத்து வந்த நபர் குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

## ரூ.30 கோடி கிரிப்டோ மோசடி: சென்னை தனியார் நிதி நிறுவனம் வழக்குப் பதிவு

கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால் அதிக வட்டி தருவதாகக் கூறி பொதுமக்களிடம் கோடிக்கணக்கில் மோசடி செய்த சென்னையைச் சேர்ந்த தனியார் நிதி நிறுவனம் மற்றும் அதன் இயக்குநர்கள் மீது பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தமிழகத்தில் சமீபகாலமாக கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால், அதிக லாபம் கிடைக்கும் என கூறி அதிக எண்ணிக்கையிலான மோசடி சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. அந்த வகையில், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவள்ளூர், தாம்பரம், திரு.வி.க. நகர் உள்ளிட்ட பகுதியில் இயங்கி வந்த தனியார் நிதி நிறுவனம், கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால் மாதந்தோறும் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை நிலையான வருமானம் தருவதாக விளம்பரம் செய்துள்ளது. இதை நம்பி ஏராளமானோர் இந்நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளனர்.

அந்த வகையில், சுமார் ரூ.20 கோடி முதல் ரூ.30 கோடி வரை பொதுமக்களிடம் வசூலித்துவிட்டு, வட்டியும் தராமல், அசல் தொகையையும் திருப்பித் தராமல் அந்நிறுவனம் ஏமாற்றியதாக புகார் எழுந்துள்ளது. கடந்த 2023ம் ஆண்டே இந்த நிறுவனம் குறித்து இந்தியா ரிசர்வ் வங்கியிடம் புகார் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்ட நிலையில், நிறுவனத்தின் இயக்குநர்கள் தலைமறைவாகினர்.

மேலும், கம்பெனிகள் பதிவுத் துறை அந்நிறுவனத்துக்கு அபராதமும் விதித்தது. இந் நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் அளித்த புகாரின் பேரில், சென்னை பொருளாதார குற்றப் பிரிவு போலீஸார் அந்நிறுவனம் மற்றும் அதன் இயக்குநர் ஜான் சார்லஸ் ரட்சகன் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தற்போது தலைமறைவாக உள்ள நிறுவன இயக்குநர் மற்றும் நிர்வாகிகளைப் பிடிக்க பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தில் முதலீடு செய்து பாதிக்கப்பட்ட நபர்கள், சென்னை அசோக் நகரில் உள்ள காவல் பயிற்சி கல்லூரி வளாகத்தில் இயங்கும் பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்துக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தங்களது புகார்களைத் தெரிவிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சென்னை மேற்கு மாம்பலத்தில் மூதாட்டியிடம் 9 பவுன் செயின் பறிப்பு - 3 பேர் கைது

**மேற்கு மாம்பலம், மார்ச்.23:** மேற்கு மாம்பலம் பகுதியில் பட்டப்பகலில் மூதாட்டியிடம் நகை பறித்த சம்பவத்தில், பழைய குற்றவாளி மற்றும் அவருக்கு உதவிய பெண் உட்பட மூவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை மேற்கு மாம்பலம் போஸ்டல் காலனியைச் சேர்ந் தவர் ராஜேஷ் குமார் (42). தனியார் ஐடி நிறுவன ஊழியரான இவர், தனது தாய் தமிழ்செல்வியுடன் (63) வசித்து வருகிறார். கடந்த 14ம் தேதி, கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய தமிழ்செல்வி மாடிப் படிகளில் ஏறிக்கொண்டிருந்தார்.

அப்போது அவரைப் பின் தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர், தமிழ் செல்வி கழுத்தில் இருந்த 9 பவுன் தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு, வெளியே தயாராக இருந்த இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார்.

இது குறித்து அசோக் நகர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திலிருந்த சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த போலீஸார், நகை பறிப்பில் ஈடுபட்ட ராயபுரம், சாந்தி காலனியைச் சேர்ந்த சீனிவாசன் (49) என்பவரை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், பறிக்கப்பட்ட நகையை மயிலாப்பூரைச் சேர்ந்த நண்பர் குமரேசன் (34) மூலமாக ஒரு தனியார் வங்கியில் அடமானம் வைத்து, ரூ.5 லட்சம் பெற்றது தெரியவந்தது.

அந்த பணத்தில், குமரேசனுக்கு கமிஷன் கொடுத்துவிட்டு, மீதமுள்ள தொகையில் ரூ.2 லட்சத்தை கண்ணகி நகரைச் சேர்ந்த அனிதா (34) என்ற பெண்ணிடம் சீனிவாசன் கொடுத்து வைத்திருந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த குமரேசன் மற்றும் அனிதாவையும் போலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து ரூ.1.91 லட்சம் ரொக்கப் பணத்தைப் பறிமுதல் செய்த போலீஸார், மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சீனிவாசன் மீது ஏற்கெனவே ராயபுரம் காவல் நிலையத்தில் 16 திருட்டு வழக்குகள் நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அங்கீகரிக்கப்பட்ட ஓஆர்எஸ் கரைசல் மட்டுமே நீர்ச்சத்து இழப்பை தடுக்கும்: சுகாதாரத் துறை அதிகாரிகள் தகவல்



**சென்னை, மார்ச்.23:** 'உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓஆர்எஸ் கரைசல் மட்டுமே உடலில் நீர்ச் சத்து இழப்பை தடுக்கும்' என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வயிற்றுப் போக்கு, நீர்ச்சத்து இழப்பு பிரச்சினைக்கான சிகிச்சைக்கு உப்பு - சர்க்கரை கரைசல் (ஓஆர்எஸ்) முக்கிய பங்கு வகிக்கிறது. அதிக வியர்வை வெளியேறுதல், வயிற்றுப் போக்கு சமயத்தில் உடலில் இருந்து குளுக்கோஸ் மற்றும் அத்தியாவசிய உப்புகள் குறை கிறது. இதற்கு உடனடியாக சிகிச்சை பெறாவிட்டால் உள் உறுப்புகள் பாதிப்பும், உயிரிழப் பும் ஏற்பட வாய்ப்புள்ளது.

நீரில் கலந்து பருக வேண்டும்: உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட உப்பு - சர்க் கரை கரைசலை பயன்படுத்து வதன் மூலம் உடலில் நீர்ச் சத்து இழப்பை தடுக்க முடியும். 20.5 கிராம் எடையுள்ள உப்பு-சர்க்கரை கரைசல் பாக்கெட் டில் 2.6 கிராம் சோடியம் குளோரைடு, 13.5 கிராம் குளுக் கோஸ், 1.5 கிராம் பொட்டாசி யம் குளோரைடு, 2.9 கிராம் ட்ரைசோடியம் சிட்ரேட் ஆகி யவை உள்ளன. நன்கு கொதித்து ஆறிய ஒரு லிட்டர் தண்ணீரில் ஓஆர்எஸ் கரைசலை கலந்து 24 மணி நேரத்துக்குள் பருக வேண்டும்.

பல்வேறு பெயர்களில் பானங்கள்: அதேநேரம், திரவ நிலையில் உப்பு சர்க்கரை கரைசல் பானங்கள் பல்வேறு பெயர் களில் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அந்த பானங்கள் உடலுக்கு புத்துணர்ச்சியை மட்டுமே தரக் கூடும்.

அதில் உள்ள தாது உப்புகள், குளுக்கோஸ் ஆகியவை உலக சுகாதார நிறு வனம் அறிவுறுத்திய வகையில் இல்லாததால், அதனை பருகுவதால் மருத்துவ ரீதியாக நீர்ச்சத்து இழப்பை சரி செய்ய முடியாது.

உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்த உப்பு - சர்க்கரை கரைசல் பாக்கெட்டுகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவ மனைகளில் இலவசமாகவும், தனியார் மருந்தகங்களில் குறைந்த கட்டணத்திலும் வழங்கப்படுகிறது. உடலில் நீர்ச்சத்து இழப்பை தடுக்க, அதனை மட்டும் பயன்படுத்த வேண்டும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழக அரசு மருத்துவமனைகளில் 'ஹீட் ஸ்ட்ரோக்' பாதிப்புக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு வார்டு



**சென்னை, மார்ச்.23:** வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் அரசு மருத்துவமனைகளில் 'ஹீட் ஸ்ட்ரோக்'பாதிப்புக்குசிகிச்சை அளிக்க சிறப்பு வார்டுகளை ஏற்படுத்த வேண்டும் என்று சுகாதாரத் துறை அறிவுறுத்தி உள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் வெப்ப அலையால் 500-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்படுகின் றனர். குறிப்பாக, உடலில் நீர்ச்சத்து குறைந்து,மயக்கம், வாதம் போன்றவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு தேர்தல் காலம் என்பதால், வெயிலில் அரசியல் கட்சியினர் பிரச்சாரம் உள் ளிட்ட பணிகள் மேற்கொள்வ தால், அவர்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இதனால், தமிழகம் முழுவதும்'ஹீட்ஸ்ட்ரோக்'என்ற வெப்பவாத பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவமனைகளில் அனைத்து வசதிகளையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "வெயில் காலத்தில் வெப்பவாதம், உட லில் நீர்ச்சத்து குறைதல். மயக்கம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற் படும். அத்தகைய பாதிப்புகள் ஏற்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகா தார நிலையங்களில் 2 படுக்கைகள் ஏற்படுத்த வேண்டும்.

மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், சிறப்பு வார்டுகளை அமைக்க வேண்டும். மருந்துகள், தடுப்பூசிகள் குறைந்த தட்ப வெப்ப நிலையில் சேமிப்பதற்கான குளிர் சாதனக் கட்டமைப்புகள் போன்றவற்றை முறையாகப் பராமரிக்க வேண் டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றனர்.

## வாக்குப் பதிவு இயந்திரங்களை வைக்க ஸ்ட்ராங் ரூம் அமைக்கும் பணி தீவிரம்



**செங்கல்பட்டு, மார்ச்.23:** செங்கல்பட்டு மாவட்டத்தில், தாம்பரம், பல்லாவரம், செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், திருப்போரூர், சோழிங்க நல்லூர் ஆகிய 7 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. மாவட்டத்திலுள்ள 7 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், முதல்கட்ட சரிபார்ப்பு முடிந்து, மறைமலை நகர் நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள ஸ்ட்ராங் ரூமில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. 20 சதவீத கூடுதல் இருப்புடன் 3,070 கன்ட் ரோல் யூனிட்; 3,684 பேலட் யூனிட்: 30 சதவீதம் கூடுதல் இருப்புடன், 3,991 வி.வி.பேட் உள்ளன.

வாக்குப் பதிவில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களே பிரதானமாக உள்ளன. தேர்தல் நெருங்கும் நிலையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங் கள், அந்தந்த சட்டப்பேரவை தொகுதிக்கான தேர்தல் நடத் தும் அலுவலர்கள் வசம் ஒப்படைக்கப்பட உள்ளன. இதற் காக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்பு மார்ச் 24-ல் மாவட்ட ஸ்ட்ராங் ரூம் திறக்கப்பட உள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் எடுக்கப்பட்டு, வாகனங்களில் ஏற்றப்பட்டு, போலீஸ் பாதுகாப்புடன் அந்தந்த தொகுதிக்கு அனுப்பி வைக்கப்படும். ஒவ்வொரு தொகுதியிலும், ஸ்ட் ராங் ரூம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மாவட்ட ஸ்ட்ராங் ரூமில் இருந்து எடுக்கப்படும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலரின் கட்டுப்பாட்டில், அந்தந்த தொகுதிக்கான ஸ்ட்ராங் ரூமில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

இறுதி வேட்பாளர் பட்டியல் தயாரான பின், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் புதிய பேட்டரி பொருத்தப்படும். பேலட் யூனிட்டில், வேட்பாளரின் சின்னம், கலர் போட் டோ. பெயர் விவரங்களுடன் கூடிய பேலட் ஷீட் பொருத்தப் பட்டு தயார்படுத்தப்படும். தேர்தலுக்கு முந்தைய நாளில், அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, வாக்குப் பதிவுக்கு பயன்படுத்தப்படும் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாம்பரம் தொகுதிக்கான வாக்குப் பதிவு இயந்திரங்கள் ஜெயகோபால் கரோடியா மேல்நிலைப் பள்ளியிலும், பல்லாவரம் வேல்ஸ் கல்லூரி, சோழிங்க நல்லூர் - துரைப்பாக்கம் செயின் கல்லூரி, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம் தொகுதி வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டுக் கான இயந்திரங்கள் காட்டாங்கொளத்தூர் ஒன்றிய அலுவலகத்திலும் வைக்கப்படும்.

## பண பலத்தை பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த தேர்தல் ஆணையம் திட்டம்



**சென்னை, மார்ச்.23:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பண பலத்தை பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்படும் வகையில் கண்காணிப்பை தீவிரப் படுத்த வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தல்களில் அதிக செலவு செய்யும் மாநிலமாக தமிழகத்தை தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது. கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலின் போது, அரவக் குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் அதிக செலவு செய்யப்படுவதை உறுதி செய்து, தேர்தலையே தேர்தல் ஆணையம் நிறுத்தியது. அப்போது அரசியல் வாதிகளிடம் இருந்து கோடி கோடியாக ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2017-ல் நடைபெற்ற சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலிலும், பணப் பட்டுவாடா நடைபெறுவதை உறுதி செய்து, அந்த தேர்தலையும் தேர்தல் ஆணையம் நிறுத்தியது. இதற்கிடையில் தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 108 தொகுதிகள் அதிக செலவு செய்யக் கூடிய தொகுதிகளாக தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

வழக்கமாக இரு தொகு திகளுக்கு ஒரு செலவினப்பார் வையாளரை நியமிக்கும் தேர்தல் ஆணையம், இந்த முறை 151 செலவினப் பார்வையாளர்களை நியமித்துள்ளது.

இந்த முறை தமிழகத்தில் பண பலமின்றி தேர்தலை நேர்மையாக நடத்த வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது.

அதற்காகவே மாநில அளவில் தேர்தல் சிறப்புப் பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் களம் சூடு பிடிக்காத நிலையில், சென்னை, திருவள்ளூர், காஞ்சி, செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள், எஸ்பிக்கள் - சென்னை, ஆவடி, தாம்பரம் மாநகர காவல் ஆணையர்கள் உள்ளிட்டோருடன் சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங், தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மாநில காவல் துறை ஒருங்கிணைப்பு அதிகாரி பிரவீன் குமார் அபினபு ஆகியோர் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத் தில், 4 மாவட்ட பறக்கும் படைகள், நிலை கண்காணிப்புக் குழுக்களின் கண்காணிப்புப் பணிகள், அவற்றின் முன்னேற்றம், கண்காணிப்பில் புகுத்தப்பட்ட புதுமைகள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட வாரியாக கேட்டறிந்தார்.

தொடர்ந்து,"விதிகளை மீறி பணபலத்தைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு அச்சம் ஏற்படும் வகையில், கண்காணிப்புப் பணிகள் இருக்க வேண்டும். அதற்கேற்ப கண்காணிப்பை வரும்நாட்களில் தீவிரப்படுத்த வேண்டும்" என்று அவர் கூட்டத்தில் அறிவுறுத்தியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு: 25 காவல் அதிகாரிகளுக்கு டிஐஜி பாராட்டு



**தூத்துக்குடி, மார்ச்.23:** விளாத்திகுளம் அருகே 17 வயது பள்ளி மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி யது. இதுதொடர்பாக போலீ ஸார் 10 தனிப் படைகளை அமைத்து தீவிரமாக தேடி, இந்த கொலையில் தொடர் புடைய நபரை கைதுசெய்து சிறையில் அடைத்தனர்.

இதையடுத்து இந்த வழக்கில் சிறப்பாக செயல்பட்ட 25 காவல் அதிகாரிகளுக்கு திருநெல்வேலி சரக டிஐஜி சரவணன் நற்பணி சான் றிதழ் வழங்கி பாராட்டு தெரி வித்தார்.

காவல் ஆய்வாளர்கள் விளாத்திகுளம் சக்திவேல், உமா மகேஸ்வரி, சங்கரலிங்க புரம் அசோக்பாபு, புதூர் ராஜேஷ், தூத்துக்குடி காசி பாண்டியன், முறப்பநாடு ஹரிஹரன், கோவில்பட்டி மேற்கு நவநீதகிருஷ்ணன், தருவைகுளம் சைரஸ், சைபர் குற் றப்பிரிவு சாந்தி, ஆறு முகநேரி திலீபன், மாசார் பட்டி பவுல் ஏசுதாசன், உதவி ஆய்வாளர்கள் காவல் கட் டுப்பாட்டு அறைராஜபிரபு, மணிமாறன், கோவில் பட்டி மேற்கு சண்முகம், விளாத்தி குளம் மாதவராஜா, நாலாட் டின் புதூர் சுந்தர், சிப்காட் பெபின் செல்வ பிரிட்டோ, ஸ்ரீவைகுண்டம் செந்தில்குமார், முறப்பநாடு சுப்புராஜ், ஆறு முகநேரி முத்து ராஜா, ஆழ் வார்திருநகரி பாலன், தூத்துக் குடி தென்பாகம் காவுராஜன், சைபர் குற்றப்பிரிவு சுதாக ரன், அச்சுதன், மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை சிறப்பு உதவி ஆய்வாளர் சுப் பிரமணியன் ஆகிய 25 காவல் அதிகாரிகளும் பாராட்டப் பட்டனர்.

# இளையான்குடி சிவன் கோவிலில் எம்பிரான் மாறநாயனார் திருகூட்டம் சார்பில் திருவாசகம் முற்றோதல் பக்தர்கள் வழிபாடு








**மானாமதுரை, மார்ச்.23:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீ ஞானாம்பிகை சமேத ராஜேந்திர சோழிஸ்வரர் கோவிலில் இளையான்குடி எம்பிரான் மாறநாயனார் திருகூட்டம் சார்பில் மாதாந்திர திருவாசக முற்றோதல் வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அடியார் பெருமக்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை திருவாசகம் முற்றோதல் நடத்தினார்கள். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்கள் அனைவருக்கும் சென்னை ஆன்மிக மலர் டிரஸ்ட் சார்பில் வெளியிடப்பட்ட திரு உத்தரகோசமங்கை மங்கை திருக்கோவில் சிறப்பிதழ் வழங்கப்பட்டது.

முன்னதாக ராஜேந்திர சோழிஸ்வரர், ஞானாம்பிகை மற்றும் எம்பிரான் மாறநாயனார் புனித வதிக்கு சிறப்பு பூஜைகள் தீபாராதனை நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை எம்பிரான் இளையான்குடி மாறநாயனார் அடியார் திருக்கூட்டத்தினர் செய்து இருந்தனர்.

## இராஜாங்க சேவை



மதுரை தெற்கு கிருஷ்ணன் கோயில் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் பிரம்மோற்சவம் இரண்டாம் திருநாள் காலை இராஜாங்க சேவை.




மதுராந்தகம் ஸ்ரீ எரிகாத்த ராமர் திருமஞ்சனம் திவ்ய சேவை.

# ராமநாதபுரம் வழிவிடு முருகன் திருக்கோவில் 86-வது ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா







**ராமநாதபுரம்ரா, மார்ச்.23:** மநாதபுரம் மாவட்டம் ராமநாதபுரம் நகரில் மத்தியில் உள்ள பிரசித்திபெற்ற ஸ்ரீ வழிவிடு முருகன் கோவில் உள்ளது . தமிழகத்தில் இங்கு மட்டுமே விநாயகர் முருகன் சேர்ந்து மூலவராக காட்சி தருகின்றனர்.

இக் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரம் விழா சிறப்பாக இருக்கும். இந்த ஆண்டு 86 ஆம் ஆண்டு பங்குனி உத்திர பெரு விழா இன்று ( 23.03.2026 ) திங்கள் கிழமை வளர்பிறை சுக்கில பட்சம் பஞ்சமி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.30 மணிக்குமேல் 7.30 மணிக்குள் விக்னேஸ்வர பூஜையுடன் தொடங்குகிறது. காலை திருமஞ்சன அபிஷேகம் செய்து காப்பு கட்டி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

வரும் ஏப்ரல் (01.04.2026) புதன்கிழமை வளர்பிறை பௌர்ணமி திதியும் உத்திரம் நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 9.15 மணிக்கு கோவிலில் இருந்து புறப்பட்டு நொச்சிவயல் ஊருணிக்கரையில் உள்ள ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் அடைந்து அங்கிருந்து காலை 10.15 மணிக்கு பால்குடம், பால்காவடி கட்டிப் புறப்பட்டு ஆலயம் வந்து சேர்ந்து பகல் 12.00 மணிக்குள் ம அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். 01.04.2026 புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு பூக்குழி நிகழ்ச்சி நடைபெறும். 02.04.2026 வியாழக்கிழமை இரவு அருள்மிகு வழிவிடு முருகன் திருவீதி உலா நிகழ்ச்சி நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை வழிவிடு முருகன் கோவில் பரம்பரை தர்மகர்த்தா க. ஜெயக்குமார் செய்துவருகிறார்.

# திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தென்மேற்கு ஒன்றிய பொருளாளர் கொரக்காவாடி பிரகாஷ் தேர்வு

**கடலூர். மார்ச்.23:** கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியில் புதிய பொறுப்பாளர்கள் அக்கட்சியின் தலைவா் தொல்.திருமாவளவன் அறிவுறுத்தலின் படி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலமுருகன் பரிந்துரையில் புதிய பெயரில் பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டது.

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் செய்யப்பட்டார் மொத்தம் எட்டு ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டது.

இதில் மங்களூர் தென்மேற்கு ஒன்றிய பொருளாளராக கொரக்காவாடி கலியன் மகன் பிரகாஷ் நியமிக்கப்பட்டார், ஒரங்கூர் பட்டாகுறிச்சி கொரக்காவாடி, வடகரம்பூண்டி, தச்சூர் ம.புதூர் இலக்கூர் மேலகல்பூண்டி, கீழக்கல்பூண்டி, ஆலத்தூர் உள்ளிட்ட கிராமங்கள் அடங்கிய தென்மேற்கு ஒன்றிய பொருளாளராக புதிய பொறுப்பேற்றார்



பிரகாஷ் அவருக்கு கட்சி தோழர்களும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்களும் வாழ்த்து தெரிவித்த வருகின்றனர்.

## இராஜ அலங்காரம்




ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ பதிநான்காம் திருநாள் இரவு யானை வாகனம் ஸத்யபாமா நாச்சியாருடன் ஸ்ரீ பெருமாள் இராஜ அலங்காரம், புறப்பாடு.




# 'சீட்' கேட்டு கட்சியினர் எனக்கு நெருக்கடி தருகின்றனர் - திருமாவளவன் வேதனை



**சென்னை, மார்ச்.23:** "தேர்தலில் போட்டியிட 'சீட்' கேட்டு கட்சியினர் என்னை நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகின்றனர்" என விசிக தலைவர் திருமாவளவன் வேதனையுடன் தெரிவித்தார்.

சென்னையில் திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுக கூட்டணியுடன் சுமுகமாக பேச்சுவார்த்தை நடக்கிறது. இரண்டொரு நாளில் தொகுதி பங்கீடு குறித்த அறிவிப்பு வெளியாகும். கட்சியின் நலன்கள் எவ்வளவு முக்கியமானதோ அதே போல கூட்டணி நலன்களும் முக்கியமானது. இன்றைய அரசியல் சூழ்நிலையை கவனத்தில் கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

தொகுதி பங்கீடு இன்னும் கையெழுத்தாகவில்லை என்பது உண்மைதான், ஆனால், இழுபறி என்ற நிலை இல்லை; தாமதம் தான் உள்ளது. மேலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திமுக கூட்டணிக்கு வலுவான சக்தியாக உள்ளது, விரைவில் அவர்கள் நல்ல முடிவை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். சசிகலா - ராமதாஸ் தலைமையிலான கூட்டணிக்கு வாழ்த்துகள். இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே, நேற்று முன்தினம் இரவு திருமாவளவன் முகநூல் வழியே நேரலையில் தொண்டர்களிடம் பேசிய போது, "திமுக கூட்டணியில் 10 தொகுதிகளுக்கும் குறைவாகவே கிடைக்கும். கட்சியில் பல ஆண்டுகளாக காத்திருப்பவர்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

தேர்தலில் போட்டியிட் சீட் கேட்டு கட்சியினர் என்னை நெருக்கடிக்கு உள்ளாக்கும் நிலை தொடர்கிறது.

குறைந்த தொகுதிகள் கிடைக்கிறதே என்ற வலி இருந்தாலும், வலிமை இருந்தால்தான் வலதுசாரிகளை வீழ்த்த முடியும். தலைமைக்கு நெருக்கடி இல்லாமல் முடிவெடுக்க கட்சியினர் வாய்ப்பு வழங்க வேண்டும். குறைந்த தொகுதிகள் கிடைப்பதால் வேட்பாளர்களை தேர்வு செய்வதில் சிரமம் உள்ளது. மக்கள் நலக் கூட்டணியில் 25 தொகுதிகள் கிடைத்தபோது, சுதந்திரமாக வேட்பாளர்களை தேர்வு செய்தோம்" எனத் தெரிவித்திருந்தார்.

# திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகல் - வேல்முருகன் அறிவிப்பு




**சென்னை, மார்ச்.23:** திமுக கூட்டணியிலிருந்து தமிழக வாழ்வுரிமை கட்சி விலகுவதாக அக்கட்சியின் தலைவர் வேல்முருகன் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த தவாக தலைவர் வேல்முருகன், "2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் முதல் திமுக கூட்டணியில் இடம்பெற்று மதசார்பற்ற சக்திகளோடு கூட்டணியில் பயணித்து வந்தோம். இந்தச் சூழலில் திமுக பேச்சு வார்த்தைக்குழுவுடன் முதல் கட்ட பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம். அதில் எங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்குவதாக திமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது நாங்கள் ஒரு இடத்தை எங்களால் ஏற்க முடியாது என்றும், கூடுதல் இடங்கள் ஒதுக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தோம். மேலும், தமிழக மக்களின் நலனுக்கான திமுக அரசிடம் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்தோம். எங்கள் கோரிக்கைகளை அரசு பொருட்படுத்தவில்லை. இதனால் திமுக கூட்டணியில் இருந்து தவாக விலகுகிறது." என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "நாங்கள் 10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்ததை திமுகவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் பெரியண்ணன் மனநிலையில், திமுக எங்களை புறக்கணித்தது. அதேபோல, நான் திமுக கூட்டணியில் இருப்பதை தமிழரல்லாத, தமிழர் விரோத அதிகாரிகள் விரும்பவில்லை. எனவே என்னை திமுக கூட்டணியிலிருந்து வெளியேற்ற அவர்கள் திட்டமிட்டனர். இதனால் தமிழர் விரோத அதிகாரிகளின் பேச்சைக் கேட்டு திமுக தலைமை தவாகவை புறக்கணித்துள்ளது.

சமூக நீதி இயக்கமான திமுக ஏன் தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க மறுக்கிறது. வன்னியர்களுக்காக 10.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் நடவடிக்கையை தடுத்த சக்தி எது?. தமிழக வேலை தமிழருக்கே என்ற சட்டத்தை திமுக அரசு நிறைவேற்றாதது ஏன்?. தமிழ் படித்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பது இன்னும் இங்கே சட்டமாகவில்லை.

கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக உள்ள சக்திகள் முதல்வர் ஸ்டாலினை சுயமாக சிந்தித்து முடிவெடுக்க விடாமல் மறுத்து, அதிகாரிகள் கொட்டமடிக்கிறார்கள் என நான் சொன்ன குற்றச்சாட்டுகளால் இப்போது தேர்தல் களத்திலும் எனக்கு நெருக்கடி கொடுக்கிறார்கள்.

தவாக நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனையின் அடிப்படையில், தமிழக வாழ்வுரிமை கட்சி, திமுக கூட்டணியிலிருந்து விலகுவதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கிறேன். எங்களின் 10 அம்ச கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம்.

அதேபோல், நாட்டை மதத்தின் பெயரால் பிளவுப்படுத்தும் பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் தவாக இடம்பெறாது என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறேன்.எனவே எங்கள் கட்சி நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து எங்கள் கோரிக்கைகளை ஏற்கும் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம். 25க்கும் மேற்பட்ட சிறிய கட்சிகள், தமிழ்த் தேசிய அமைப்புகள் எங்களுடன் ஆலோசித்து வருகின்றன. அவர்களின் கருத்தை கேட்டு கூட்டணி குறித்து முடிவெடுப்போம்" என்றார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com**